# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே








செவ்வாய்க்கிழமை 01.03.2022 supeedsam.com supeedsam@gmail.com


## அபகரிக்கப்பட்ட நிலங்களை மீட்க

# புலம்பெயர் தேசங்களிலும் ஜனநாயக போராட்டம்



அபகரிக்கப்பட்ட நிலங்களை மீட்க நாட்டிலும், புலம்பெயர் தேசங்களிலும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என முன்னாள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக்கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் மாவட்ட அலுவலகத்தை வவுனியாவில் நேற்று திங்கட்கிழமை திறந்து வைத்ததன் பின்னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், பயங்கரவாத தடை சட்டத்தை

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கை அமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்து பேசிய பீரிஸ் தரப்பினர்!



அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன ஆகியோர், குளோபல் ஸ்ரீலங்கா மன்றம் மற்றும் ஐரோப்பாவிலுள்ள இலங்கை அமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்து பேசியுள்ளனர்.

ஜெனீவாவிலுள்ள இலங்கை தூதரகத்தில் நேற்று திங்கட்கிழமை குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்திற்கு முன்னதாக இந்த சந்திப்பு இடம்பெற்றதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

இதன்போது, குறித்த சந்திப்பில் இலங்கைக்கு எதிரான ஜெனீவா பிரேரணை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## இன்று இரவு மின்வெட்டு இல்லை

நாட்டில் இன்று செவ்வாய்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை அனைத்து பிரிவினருக்கும் மூன்று மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இதுதொடர்பான அறிவித்தலினை வெளியிட்டுள்ளது.

மின்சாரத் தேவை அதிகரித்தால், இரவு நேரத்தில் மேலும் 30 நிமிடம் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## தமிழ் தேசிய கூட்டமைப்பின் மூன்று எம்.பி.கள் முஸ்லிம் புத்திஜீவிகளுடன் முக்கியமான சந்திப்பு



(பாறுக் ஷிஹான்)

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் முஸ்லிம் புத்திஜீவிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு சுகாதார முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம். ரி. ஹசன் அலியின் நிந்தவூர் இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் எம். பி, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், தேசிய பட்டியல் எம். பி த. கலையரசன் ஆகியோர்.கூட்டமைப்பு சார்பாக பங்கெடுத்தனர்.

முஸ்லிம் புத்திஜீவிகள் சார்பாக பேராதனை

02 ஆம் பக்கத்தில்...

## சோத்துக்குவிப்பு குற்றச்சாட்டிலிலிருந்து பசில் விடுதலை

(காந்தன்)

கடுவெல நீதவான் நீதிமன்றில் சொத்துக்குவிப்பு குற்றச்சாட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ விடுவிக்கப்பட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பணிக்கொடைப் பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் பொலிஸ் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி அதிகாரிகளை சந்திக்கின்றார் பஷில்!

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி அதிகாரிகளை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில், அவற்றின் வருடாந்த கூட்டத்தொடரை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையிலேயே நிதி அமைச்சர், குறித்த நிறுவனங்களின் அதிகாரிகளை

சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சிவராத்திரியன்று 20,000 உருத்திராட்சை மாலை தயார்!



(காரைதீவுசகா)

சைவசமயிகள் தமது முழுமுதற் கடவுளான சிவனை நினைந்து அனுஸ்ட்டிக்கும் மஹா சிவராத்திரி விரதம் இன்று(1) செவ்வாய்க்கிழமை ஆகும்.

அதனையொட்டி சைவசமயிகள் வாழும் பட்டி தொட்டியெல்லாம் மஹாசிவராத்திரிக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றுவருகின்றன. குறிப்பாக

02 ஆம் பக்கத்தில்...











## அவமானங்கள் எனக்கு பழகி விட்டது



நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக கட்சி பேதமின்றி அனைத்து தரப்பினரும் ஒரே மேடைக்கு வர வேண்டிய தருணம் வந்துள்ளதாக

02 ஆம் பக்கத்தில்...

# கிழக்கில் 4ஆயிரம் ஆசிரியருக்கு தட்டுப்பாடு:3ஆயிரம் அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம்! அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் ஆசிரியர்களாக நியமிக்கவுள்ளோம்!

## கிழக்கு 3 வருடத்தில் 5வது இடத்தை அடையவேண்டும்: அனைவரும் ஒத்துழையுங்கள்! கிழக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திசாநாயக தெரிவிப்பு

**(வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கில் ஆளணியின்படி சுமார் 24ஆயிரம் ஆசிரியர்கள் தேவை. தற்போது 20ஆயிரம் ஆசிரியர்கள் இருக்கின்றனர். சுமார் 4000ஆசிரியருக்கு தட்டுப்பாடு நிலவியது.எனினும் அண்மையில் 3ஆயிரம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். கிழக்கு பாடசாலைகளில் பணியாற்றும் அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் ஆசிரியர்களாக நியமிக்கவுள்ளோம்.

இவ்வாறு, கிழக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி. திசாநாயக தெரிவித்தார்.

சம்மாந்துறைவலயக்கல்விப்பணிமனை நடாத்திய நூல் வெளியீட்டுவிழாவில் பிரதம அதிதியாக கிழக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி. திசாநாயக கௌரவஅதிதியாக கிழக்குமாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் ஆகியோர் கலந்துசிறப்பித்தனர். அங்கு செயலாளர் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நூல் வெளியீட்டுவிழா சம்மாந்துறை வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் சம்மாந்துறை தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தில்(தேசிய பாடசாலை) கடந்த வியாழனன்று நடைபெற்றது.



எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள பொதுப்பரீட்சைகளில் மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் இழந்தகல்வியை மீட்கும் கொவிட்19 விடுமுறைக்கான செயற்றிட்டமாக சம்மாந்துறை கல்வி வலயம் தயாரித்த தரம் 11க்கான விஞ்ஞானம் மற்றும் கணித நூல்கள் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் தரம்4க்கான கணிதம் தமிழ்மொழி சுற்றாடல்சார் செயற்பாடுகளடங்கிய நூல் ஆகிய மூன்று சுயகற்றல் நூல்கள் வெளியிட்டுவைக்கப்பட்டன. கூடவே இ;வ்வாண்டுக்கான வலய வருடாந்த அமுலாக்கத்திட்ட கைநூலும் வெளியிட்டுவைக்கப்பட்டது. விழாநிகழ்வுகளை உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தி தொகுத்தளித்தார்.

அங்கு கல்விச்செயலாளர் திசாநாயக்க மேலும் உரையாற்றுகையில்:

நீங்கள் அனைவரும் கல்விப்புலத்தில் செய்கின்ற சேவையை கடமையாக கருதமுடியாது. அது ஓர் உன்னதமான ஒரு சமுகசேவை ஆகும். ஒரு பாடசாலையைத் திறந்தால் ஆயிரம் சிறைச்சாலைகளை மூடிவிடலாம் என்பார்கள். சுகாதாரத்திற்கு அடுத்தபடியாக கல்விக்கு பில்லியன் கணக்கில் செலவுசெய்கிறார்கள். நாம் நித்திரை செய்வதற்கு முன்னர் அன்றைய கடமையை ஒழுங்காகச்செய்தோமா? என்று ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும். சுய கேள்வியை எழுப்பவேண்டும்.

கல்விக்காக செலவழிக்கும் பில்லியனுக்கு கைமாறாக நாம் என்ன உற்பத்திசெய்திருக்கிறோம். துரதிஸ்டவசமாக கிழக்கு தொடர்ந்து 9வது இடத்தில் இருந்துவருகிறது. எமது பாரம்பரிய சிந்தனைகளை மனப்பாங்கை மாற்றவேண்டும். புதிதுபுதிதாக சிந்திக்கவேண்டும். கல்வியில் நல்லதொரு மாற்றத்தைக் கொணர அனைவரும் சிந்திக்கவேண்டும். திட்டங்கள் வகுத்து அதன்படி உழைக்கவேண்டும்.பாடுபடவேண்டும். ?அனைவருக்கும் கல்வி? என்பது யுனிசெவ் தொடக்கம் பல நாடுகளுக்கும் பொதுவான வாசகமாகவுள்ளது.? சிறந்த எதிர்காலத்திற்கான கல்வி? என்பதே எனது வாசகம்.

எனது தாய் மாகாணமான கிழக்கு மாகாணம் இன்னும் 3வருடங்களில் 5வது இடத்தை அடைய வேண்டும் என்பதே எனது இலக்கு. அதற்காக இரவில் நீண்டநேரம் சிந்திக்கிறேன். நீங்கள் அனைவரும் சிந்தித்து ஒத்துழைக்கவேண்டும். தலைவர்கள் நீங்கள். மாணவர்களுக்கு உதவவேண்டும். அவர்களை ஊக்குவிக்கவேண்டும். கிழக்கில் பல மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாதுள்ளனர். மேசன் தச்சு வேலை செய்கின்றனர்.அப்படிஎனின் எங்கோ ஒரு தவறு நடந்திருக்கிறது. இல்லையா? அதனை ஆராயவேண்டும்.

**ஆசிரியர் சம்பளப்பிரச்சினை தீர்வு**

இலங்கையில் கடந்த 2மாதங்களாக பயங்கர நெருக்கடிநிலை கல்வியில் இருந்தது. அதாவது சம்பள முரண்பாட்டை முற்றாக நீக்கவேண்டி இடம்பெற்ற தொடர்போராட்டமே அந்த நெருக்கடிநிலைக்கு காரணம்.

தற்போது அரசாங்கத்தினால் அது தீர்வுகாணப்பட்டு முடிவுக்குகொண்டுவரப்பட்டுள்ளது.அதிபர் ஆசிரியர்களுக்கு அது மகிழ்ச்சி. சந்தோசம். அது கட்டாயம் செய்யப்படவேண்டும்.நடந்துள்ளது. எனவே இனி எந்தக்காரணமும் சொல்லித்தப்பிக்க முடியாது. எந்தவிதத்திலும் தப்புவதற்கான காரணம் சொல்லமுடியாது. நன்றாக படிப்பிக்கவேண்டும்.நல்ல பெறுபேற்றை உயற்பத்திசெய்யவேண்டும்.

ஆனால் இப்போது இன்னுமொரு சிறுவர்க்கத்தினர் தங்களுக்கு சம்பளம் போதாது.ஆசிரியர்களுக்குக்கூட எமக்குக்குறைய என்று.எனவே எங்களுக்கும் சம்பளம் கூட்டவேண்டும் என்று கோசமெழுப்ப தொடங்கியுள்ளனர்.

ஒரு வலயக்கல்விப்பணிப்பாளர் என்னிடம் சிரேஸ்டஆசிரியரை விட தனக்கு சம்பளம் குறைவாக உள்ளது என கவலைப்பட்டார். கவலைப்படவேண்டாம் கடந்த 20-30 வருடங்களாக அவர்கள் குறைந்த சம்பளத்தில்தான் வாழ்ந்தவர்கள். இன்றுதான் சம்பள அதிகரிப்பை பெற்றுள்ளார்கள் என்று சொன்னேன்.

கல்விப்புலத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கு இன்னும் தீர்வுகாணப்படவில்லை. ஏன் சரியான ஆராய்ச்சி இல்லை. எம்மிடையே ஆராய்ச்சியாளர்கள் உருவாகவில்லை. பிரச்சினைகள் ஆராய்ச்சிசெய்யப்படவேண்டும். இதனால் பிரச்சினைகள் பிரச்சினைகளாகவே தொடர்ந்துள்ளன. பிரச்சினைகளை தீர்க்க ஆராய்ச்சிகள் செய்ய இப்போது அரசாங்கமும் விண்ணப்பங்களைகோரியுள்ளது.

**கிழக்கு கல்வி உயரும்.!**

நீங்கள் அனைவரும் கல்வியியலாளர்கள். நான் கல்வியியலாளன் அல்ல. நிருவாகசேவையைச்சேர்ந்தவன். நான் 2011 மார்ச் 23 ஆம் திகதி கிழக்கு மாகாணத்திற்கு வந்தவன். இதுவரை இங்குதான் பணியாற்றுகிறேன்.

201%இல் நான் கிழக்கு மாகாண கல்விஅமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டேன். ஆனால் எந்தவித நியாயமான காரணமுமில்லாமல் பதவியிலிருந்து 8மாதங்களில் நீக்கப்பட்டேன். அதே தரப்பினர் இன்று மீண்டும் கிழக்கு கல்வியமைச்சிற்கு என்னை செயலாளராக நியமித்துள்ளனர்.

கிழக்கு மாகாண கல்வியை முன்னேற்றவேண்டும்.தினமும் 9மணிநேர வேலையின்பின்னர் நித்திரைக்குசெல்லமுன் பலமணிநேரம் சிந்திக்கிறேன். மீண்டும் மீண்டும் அதிகமாக சிந்திக்கிறேன். எப்படி கிழக்குக் கல்வியை முன்னுக்கு கொண்டுவரலாம் என்று. நீங்களும் சிந்தியுங்கள். ஏதாவது அகப்பட்டால் அதனைத்தெரிவியுங்கள். முன்மொழிவுகள் பரிந்துரைகள் ஆலோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம்.வரவேற்கப்படும். தயவுசெய்து ஒன்றுபடுங்கள் ஒத்துழையுங்கள்.நிச்சயமாக கிழக்கு கல்வியை உயர்த்தமுடியும். என்றார்.

தொடர்ச்சியாக நூல்அறிமுகவுரைகளை ஆசிரியஆலோசகர்களான எம்.எம்.எம்.ஜௌபர்ரி.எல்.றைஸ்டீன் ஏ.ஜி.எம்.கிஷோர் ஆகியோர் நிகழ்த்தினர். பின்னர் 3நூல்களையும் பணிப்பாளர் நஜீம் அதிதிகளிடம் வழங்கி வைத்து வெளியிட்டு வைக்கப்பட்டன.பின்னர் அவை அதிபர்களிடம் வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி. திசாநாயக மற்றும் கிழக்குமாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் ஆகியோர் பொன்னாடை போர்க்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அதன்பின்னர் அவர்களது உரைகள் இடம்பெற்றன.

மாணவர்களின் மூவின கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. கல்விஅபிவிருத்திக்கான பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீட் நன்றியுரையாற்றினார்.

## சிவராத்திரியன்று 20,000 உருத்திராட்சை

**சிவாலயங்களில் சிறப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.**

**அதே வேளை சித்தர்களின் குரல் அமைப்பினர் சிவராத்திரியையொட்டி பக்தர்களுக்கு விநியோகிக்கும் பொருட்டு 20ஆயிரம் உருத்திராட்சை மாலைகளை தயார்படுத்தியுள்ளர்.**

**சித்தர்கள் குரல் அமைப்பின் மேலாளர் சிவசங்கர் ஜீ தலைமையில் மகேஸ்வரன் ஜீயின் பங்கேற்புடன்; இவ் உருத்திராட்சை மாலைகள் நேற்றுமுன்தினம்வரை மட்டுநகரில் தயார்படுத்தப்பட்டன.**

## அவமானங்கள் எனக்கு பழகி விட்டது

**முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

**எவ்வாறாயினும், தனது ஆட்சிக் காலத்தில் இவ்வாறான ஒரு துயரமான கதியை மக்கள் எதிர்கொண்டதில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.**

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலன்னறுவை மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்துள்ளார்.**

**எனது ஆட்சிக்கு பிறகு பிரச்சனைகள் இல்லாத அழகான நாட்டைக் நான் கையளித்தேன். மக்கள் உணவருந்தி மகிழ்ச்சியாக இருந்தார்கள், விவசாயிகள் நன்றாக விவசாயம் செய்தார்கள், என் காலத்தில் பிரச்சனைகள் இல்லாமல் இருக்கவில்லை, ஆனால் இந்நாட்டு குடிமக்களின் அன்றாட வாழ்க்கை இன்று இருக்கும் நிலைக்கு வீழ்ச்சியடைந்திருக்கவில்லை. அரசாங்கத்தை குற்றம் சாட்டி இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்கள் ஒன்றிணைந்து நாட்டை காப்பாற்ற, சிதைந்து கொண்டிருக்கும் நாட்டை மீட்டெடுக்க இது ஒரு சந்தர்ப்பமாகும். இன்று என்னை அவதூறாக பேசுகின்றனர், இழிவு படுத்துகின்றனர். ஏறக்குறைய 54 ஆண்டுகால அரசியல் வாழ்க்கையில் ஏற்பட்ட அவதூறுகள், அவமானங்கள் அனைத்தும் எனக்கு பழகி விட்டது. இன்று நம் நாட்டில் பல பிரச்சனைகள் உள்ளன, விவசாயிகள் கண்ணீரில் வாழ்கிறார்கள், நான் கடந்த ஒரு வருடமாக விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் பேசி வருகிறேன். பொலன்னறுவை மக்களிடம் வாக்குகளைப் பெற்ற மூன்று அரசாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். என்னைத் தவிர. அவர்களில் ஒருவரேனும் பாராளுமன்றத்திலோ அல்லது அதற்கு வெளி?யிலோ விவசாய சமூகத்தின் அவல நிலையைப் பற்றிப் பேசுவதில்லை. எல்லாவற்றிற்கும் ஆமாம் சார். ஆமாம் சார். அவ்வளவுதான்.**

## தமிழ் தேசிய கூட்டமைப்பின் மூன்று

**பல்கலைக்கழக பேராசிரியர் ஏ. சர்ஜுன், தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர்களான ரமீஸ் அப்துல்லா மற்றும் பௌசர் ஆகியோர் பங்கெடுத்தனர்.**

**மாலை 5.00 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை இடம்பெற்ற இச்சந்திப்பில் தமிழ் - முஸ்லிம் உறவை பலப்படுத்துவது, இரு இனங்களுக்கும் இடையிலான பிரச்சினைகளுக்கு இணக்க தீர்வு எட்டுவது ஆகியன குறித்து ஆராயப்பட்டது.விரைவில் மீண்டும் சந்தித்து பேசுவது என தீர்மானித்து விடை பெற்றனர்.**

## அபகரிக்கப்பட்ட நிலங்களை மீட்க...

**நாங்கள் இப்போது தொடர்ச்சியாக நாற்பது ஆண்டுகளுக்கு பின்னர் ஆனாலும் நாங்கள் ஏற்கனவே எதிர்த்து குரல் எழுப்பியிருக்கின்றோம். அதற்கு எதிராக வாக்களித்து இருக்கின்றோம். அவ்வாறான சூழ்நிலைகள் இருந்தாலும் இப்பொழுது இயக்க ரீதியாக எங்கள் மத்தியில் இயக்கத்தை முன்னெடுத்திருக்கின்றோம்.**

**நாங்கள் இப்போது தீர்மானம் எடுத்திருப்பது எங்களுடைய நிலம் நாங்கள் எங்களை ஆழ வேண்டுமாக இருந்தால் எங்கள் மண்ணிலே நில உரிமை அடிப்படையாக இருக்க வேண்டும். அது இருக்கிறதா? ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக பல முனைகளில் மகாவலி, தொல்பொருளியல் அடிப்படையில் பௌத்த மயமாக்குவது, சிங்கள மயமாக்குவது, சிங்களவர்களை குடியேற்றுவது , அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர்களுடைய நிலங்கள் பறிக்கப்படுவது அதனைவிட பறிக்கப்படுவதற்கு சமமாகவும், அதற்கு அப்பாலும் இராணுவங்கள் இலட்சக்கணக்காக வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருப்பவர்கள். பல ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் எங்களுடைய பிரதேசங்களில் கைப்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. இவற்றையெல்லாம் நாங்கள் மதிப்பீடு செய்யப்போகின்றோம்.**

**நிலத்தினுடைய விடுதலைக்காக விடிவிற்காக அதனை நாங்கள் உறுதிப்படுத்துவதற்காக எங்களுடைய சுதந்திரத்தை நிலை நாட்டுவதற்கு எங்கள் மண்ணை நாங்கள் ஆளுவதற்கு நிலம் எங்களுக்கு இருக்க வேண்டும். மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும்.**

**இன்று அரசினாலும் , இராணுவத்தினாலும் தொடர்ந்தும் பல காரணங்களை கூறி கைப்பற்றப்படுகின்ற நிலங்களில் சிங்களவர்களை குடியேற்றி எங்களை சிறுபான்மையானவர்களாக ,சுயநல உரிமைக்கு தகுதியற்றவர்களாக நாங்கள் அரசியல் உரித்தை கோருவதற்கு எங்களை தகுதியற்றவர்களாக ஆக்குகின்ற மிக கொடிய போராட்டத்திலே மிக பெரிய திட்டத்தோடு இன்றைய அரசாங்கமும் ஒவ்வொரு நாளும் அந்த நிலைமைக்கு அவர்கள் ஈடுபட்டு வருவதுமல்ல அதற்கு நாங்கள் முகம்கொடுத்து பலவிதமான நெருக்கடிகளை நாங்கள் ஜனநாயக ரீதியில் நிலத்தை பாதுகாக்க போராட வேண்டி இருக்கின்றோம்.**

**எமது மக்களை பாதுகாக்கலாம் என்பதற்காக ஒரு சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கின்ற இலங்கை, சர்வதேச சூழ்நிலையில் நிலம் ரீதியாக முழுமையான விபரங்களையும் , வரைபடங்களை யும் மக்கள் இழந்திருக்கிறார்கள் , மக்கள் தங்களுடைய நிலத்தை எவ்வளவு இழந்திருக்கிறார்கள் அந்த நிலங்களை பாதுகாக்கவும், பறிக்கப்பட்ட , அபகரிக்கப்பட்ட , இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை நாங்கள் மீட்டெடுப்பதற்காகவும் விரைவில் தமிழரசுக்கட்சியின் மாநாடு நடத்தப்பட இருக்கின்றது.**

**அடுத்த வாரத்தில் இருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் கூகுள் மெப் அடிப்படையில் எவ்வளவு நில வரைபடங்களை கொண்டுள்ளது.**

**அதற்கு பின்னர் எவ்வளவு நிலங்களை நாங்கள் இழந்திருக்கின்றோம். இராணுவம் எவ்வளவு நிலங்களை கைப்பற்றியிருக்கின்றது, அவ் நிலங்களில் தாங்கள் குடியுரிமை கொண்டுள்ளவர்களாக , உரித்துடையவர்களாக , அங்கே பண்ணைகளை வைத்திருப்பதும், விவசாயத்தை செய்வதும் , தொழில்பேட்டைகளை அமைப்பதும் இவ்வாறு வடக்கு கிழக்கு முழுவதும் சிங்களவர்களை குடியேற்றுவது மட்டுமல்ல இராணுவமே குடியேற்றப்பட்டவர்களாக எங்களுடைய நிலங்களை கைப்பற்றி பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை தங்களுடைய கையிலே வைத்திருக்கிறார்கள்.**

**இவற்றையெல்லாம் சர்வதேசத்திற்கு முன்னால் முன்வைப்பது மட்டுமல்ல ஜனநாயக ரீதியாக இந்த நாட்டுக்குள்ளும், வெளியிலும் புலம்பெயர்ந்தவர்களும் நிலத்தை மீட்பதற்காக போராட்டங்களை முன்னெடுப்பதற்கு மாநாட்டிலே உரிய தீர்மானத்தை எடுக்க இருக்கின்றோம் என மேலும் தெரிவித்தார்.**




# மட்டக்களப்பில் பாதிக்கப்பட்ட 9736 விவசாயிகளுக்கு சுமார் 36 கோடியே 19 இலட்சம் ரூபாய் நஸ்டஈட்டுக் கோடுப்பனவாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

அதிமேதகு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவர்களது சுபீட்சத்தின் நோக்கு கொள்கைக்கு பிரகடனத்திற்கு அமைவாக நாட்டை சுபீட்சத்தின்பால் கட்டியெழுப்பும் நோக்கில் நாடளாவிய ரீதியில் அரசாங்கத்தினால் பல்வேறு துறைசார் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுவரும் நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் மக்கள் நலன்சார் பல்வேறு வேலைத்திட்டங்கள் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



அதற்கு அமைவாக விவசாயிகளின் நலன் நோன்புகை தொடர்பாக அரசாங்கம் கூடுதலான கவனத்தை செலுத்தி வருகின்றது. அந்த அடிப்படையில் கடந்த 2020 மற்றும் 2021 காலப்பகுதிகளில் பெரும் போக செய்கையின்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நஸ்ட ஈட்டுக்கொடுப்பனவுகள் எதிர்வரும் (28) திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் வழங்கி வைக்கப்படவுள்ள நிலையில் அது தொடர்பாக துறைசார் அரச அதிகாரிகளை தெளிவூட்டும் விசேட கலந்துரையாடலொன்று நேற்று (26) மாலை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் அவர்களது தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரன் அவர்கள் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடல் .

# கிராம அபிவிருத்திச்சங்க கட்டடத் திறப்பு விழா



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

2020 சப்பரிகமக் வேலைத் திட்டத்தில் 2 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் கட்டி முடிக்கப்பட்ட ஏறாவூர்6 கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கான கட்டடத்திறப்பு விழா ஏறாவூர்6 சப்பரிகமக் குழுத்தலைவர் கீ.றிக்னாஸ் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் திருமதி நிஹாரா மௌஜூத், சிறப்பதிதிகளாக ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி Dr F.S.M ஷாபிரா வஸீம், ஏறாவூர் நகர பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அ.ஏ.சிஹானா ஆகியோர் கலந்து கொண்டு மக்கள் பாவனைக்காக இக்கட்டடத்தை திறந்து வைத்தனர். மேற்படி கட்டடத்தில் ஏறாவூர் 6 கிராம சேவகர் பிரிவுக்குரிய கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சுகாதார பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர் ஆகியோரினது பொதுமக்களுக்குரிய அலுவலகச் செயற்பாடுகள் ஒரே இடத்திலிருந்து கிடைக்கக் கூடியவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதுடன், மிக நீண்ட நாட்களாக இருந்த இக்குறைபாடானது, இதன் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

ஏறாவூர் 6 கிராம அபிவிருத்திக் குழுவின் முழுமையான திட்ட முன்மொழிவு ,மேலதிக நிதிப் பங்களிப்பினூடாக இக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை குறிப்பிடததக்கதாகும்.

# பாரிய மரங்கள் உடைந்து விழும் நிலையில் காணப்படுவதனால் போதுமக்கள் பெரும் சிரமம்





(பாறுக் ஷிஹான்)

வீதி ஒழுங்கு முறைகள் உரிய முறையில் பேணப்படாமையினாலும் சீரற்றுள்ள பாதையோரங்களினாலும் பாதசாரிகள் சிரமப்படுவதுடன் விபத்துக்களும் அடிக்கடி ஏற்படுகின்ற சம்பவங்கள் தினமும் பதிவாகி வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நற்பிட்டிமுனை கிட்டங்கி பகுதியை இணைக்கும் பிரதான வீதியின் இரு மருங்கிலும் பாரிய மரங்கள் உடைந்து விழும் நிலையில் காணப்படுவதனால் வீதியில் பயணம் செய்யும் மாணவர்கள் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் இப்பிரதேசத்தில் எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள விபத்துக்களை குறைத்து பெறுமதியான மனித உயிர்களை பாதசாரிகளின் நலன் கருதி உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றனர். நற்பிட்டிமுனை கிட்டங்கி வீதியை ஊடறுத்து செல்லும் பகுதியில் பாரிய மரங்கள் முறிந்து விழும் நிலையில் உள்ளமையினால் இவ்வாறு பொதுமக்கள் வாகன சாரதிகள் தினமும் உயிரை கையில் பிடித்து வீதியை கடக்கின்ற போது இவ்வாறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதியில் உள்ள வீதியின் இருமருங்கிலும் உள்ள வடிகான்களுக்கு மேலாக இடப்படும் கொங்கிரீட் மூடிகள் முறையாக போடப்படாமையினால் விபத்துக்களும் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன.எனவே இப்பிரதேசத்தில் அதிகரித்துள்ள விபத்துக்கள் வாகனங்கள் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் முகமாகவும் பாதசாரிகளின் நலன் கருதி இந்நடவடிக்கை துரித கதியில் முன்னெடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த காலங்களில் கொரோனா 3 அனர்த்த அச்சுறுத்தல் நிலையிலும் கூட வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வீதி போக்குவரத்திற்கு தடையாக இருந்த பாரிய மர கிளைகளை வெட்டி அகற்றி இருந்தனர். அண்மையில் கூட மலையக பகுதியில் பாரிய மரம் ஒன்றினை அகற்ற முற்பட்ட போது மரம் விழுந்து ஆசிரியர் ஒருவர் மரணமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவில், போத்துவில் வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கி வைப்பு



(நூருள் ஹுதா உமர், எம்.என்.எம்..அப்ராஸ்)

திருக்கோவில் மற்றும் பொத்துவில் வைத்தியசாலைகளுக்கு அவசரத்தேவையாக இருந்த அம்புலன்ஸ் வண்டிகள் இன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வைத்து குறித்த வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர்களிடம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம். றிபாஸ் கையளித்தார்.

மிக நீண்டதூரம் பயணம் செய்து நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் இந்த வைத்தியசாலைகளில் நீண்ட காலமாக நிலவிவந்த இந்த பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் நோக்கில் சுகாதார அமைச்சு இந்த அம்புலன்ஸ் வண்டிகளை வழங்கி வைத்துள்ளது.

இந்நிகழ்வில் திருக்கோவில் வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.பி. மஸ்கூத், பொத்துவில் வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டீ. எஸ்.ஆர்.டீ. ஆர். றஜாப் ஆகியோர் கலந்து கொண்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம். றிபாஸிடமிருந்து அம்புலன்ஸ் வண்டிகளை உத்தியோக பூர்வமாக பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள், உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.




# கல்முனையில் டிஜிட்டல் அறிவை மேம்படுத்தும் வேலைத்திட்டம் முன்னேடுப்பு!



( எம்.என்.எம். அப்ராஸ்)

பிரதேச மட்ட அரசியலில் ஈடுபடும் பெண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பெண்சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் டிஜிட்டல் அறிவினை மேம்படுத்துவதற்கான ''ஜனனி'' திட்டத்தினை சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்குமான மக்கள் இயக்கம் (கபே அமைப்பு ) தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் முன்னெடுத்து வருகின்றது.

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அம்பாரை மாவட்டத்திற்கான முதலாம் கட்ட நிகழ்வு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) தேசிய நிறைவேற்று பணிப்பாளர் அஹமட் மனாஸ் மக்கீன் தலைமையில் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் எஸ்.எல்.அஸீஸ் அவர்களின் இணைப்பில் கல்முனையில் நேற்று (26) இடம்பெற்றது .

இதன் போது வளவாலராக மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் எம்.பி.எம் சுபியான், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடக செயலாளர் சிரேஸ்ட ஊடகவியலாளர் ஜெ.யோகராஜ் , விடியல் இணையத்தள பிரதம ஆசிரியர் ஊடகவியலாளர் ரிப்தி அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் டிஜிட்டல் கல்வியறிவினை மேம்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களின் முக்கியத்துவம், தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு சமூக ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் ஊடக கோட்பாடுகள், ஊடக சந்திப்புக்களில் உரையாற்றுகின்ற விதம் மற்றும் தகவல் அறியும் சட்டம்,இணையவழி வன்முறைகளை தொழில்நுட்ப ரீதியாக எவ்வாறு முகம் கொடுப்பது என்பது பற்றியும், இணையவழி வன்முறைகளுக்கு முகம் கொடுக்கின்ற போது, அவற்றுக்கு சட்ட ரீதியாக எவ்வாறு நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் வளவாளர்களினால் நிகழ்வில் கலந்து கொண்ட பிரதேச மட்ட அரசியலில் ஈடுபடும் பெண் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெண் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# சுயநிர்ணய உரிமையோடு எங்களை நாங்களே ஆழ்கின்ற பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்

## யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்

(இ.சுதாகரன்)

தாய் நாட்டினை இரண்டாகப்பிரிக்காது ஒரே நாட்டினுள் சுயநிர்ணய உரிமையோடு எங்களை நாங்களே ஆழக்கூடிய பொறி முறையுடன் கூடிய அதிகாரப்பகிர்வு மூலமாக வடகிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

துறைநீலாவணையில் ஞாயிற்றுக்கிழமை மாலை இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வாலிபர் முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக்கும் போதே யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதிச்சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் உரிமைக்காக போராடுகின்ற கட்சி மட்டுமல்லாது தமிழ் மக்கள் உரிமைகள் மறுக்கப்படுகின்ற போது தட்டிக் கேட்டு உரிமையினை நிலைநாட்டப் போராடுகின்ற கட்சி இது தமிழ் மக்களின் குருதியில் உறைந்த விடயம். வீரசாகசங்கள் வீரச்செயற்பாடுகள் எங்களுடைய நிலத்தினை பாதுகாப்பதற்கான முயற்சியாகும்.

தமிழ் மக்களின் நில அபகரிப்பானது வடகிழக்கில் குறிப்பாக கிழக்கு மாகாணம் மற்றும் முல்லைத்தீவு ,வவுனியா மாவட்டங்களில் மிக மோசமான முறையில் நடைபெற்று வருகின்றது.இதனை தடுத்து நிறுத்துவதற்கு பல முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம்.அதன் ஒரு



அங்கமாக அண்மையில் ஜனாதிபதிச் செயலகத்திற்கு முன்னாள் தமிழ் தேசியக் கூட்டமைப்பினை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதி நிதிகள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தோம். அதில் நாங்கள் கூறிய விடயம் தமிழ் மக்களின் நிலங்களை அபகரிப்பினை நிறுத்த வேண்டும்.வெவ்வேறு சட்டப்போர்வையில் நில அபகரிப்பினை மேற்கொள்ள வேண்டாம் என்ற கோரிக்கையினை முன்வைத்திருந்தோம்.

நாட்டின் தலைவர் கூறிய பதில் உங்களது %0 வருட கால முயற்சியினை %0 நாட்களில் மாற்றுவேன் என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு மிகப் பொருத்தமான ஆளுநரையும் கிழக்கு மாகாண நில அபகரிப்புக்கு நியமித்திருக்கின்றார். ஜனாதிபதி அவர்கள்

மேச்சல்தரை, வனப்பாதுகாப்பு,கரையோரப்பாதுகாப்பு,மகாவலி எனும் போர்வையில் நில அபகரிப்பானது தொடர்ந்து கொண்டே செல்கின்றது.மறுமுனையில் தொல்லியல் திணைக்களத்தின் அட்டகாசமானது சொல்லில் அடங்காது எமது கலை கலாசார விழுமிய அடையாளங்கள் மாற்றியமைக்கப்பட்டு பௌத்த சின்னங்கள் மாத்திரமே நாட்டில் தொல்லியல் திணைக்களத்தினால் பாதுகாக்கும் நிலைமை உருவெடுத்துள்ளது.நீங்கள் அன்று செய்த வீரச்செயற்பாடுகளை இன்று வடக்கிலும் கொண்டு செல்ல வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

அரசாங்கமானது வடகிழக்கில் தமிழ் மக்களின் இன அடையாளங்களையும் ,மொழி அடையாளங்களையும் அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு பல போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.தமிழ் மக்களின் இருப்பிற்காக தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதி வழங்கியவர்களில் பலர் இன்று காணாமல் போயிருக்கின்றார்கள். இவர்களை மக்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

இந் நாட்டில் தமிழ் மக்கள் சரித்திர பூர்வமாக வாழ்ந்தவர்கள் எங்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு.வடகிழக்கில் பல பிரதேசங்களை இழந்தாலும் இருக்கின்ற நிலங்களை பாதுகாத்து பெரும்பான்மை இனமாக வாழ்ந்து வருகின்றோம்.எமது உரிமைகள் கிடைக்கும் வரை தமிழ்த்தேசியத்துக்காக குறல் கொடுத்துக்கொண்டு இருப்போம் என்றார்.

# கிழக்கில் 45 பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள்: அரசியல் தலையீட்டினால் நிரப்பப்படாமல் இழுத்தடிப்பு என்கிறது கிழக்கு கல்வி அதிகாரிகளின் சங்கம்

(செயிட் ஆஷிப்)

கிழக்கு மாகாணத்திலுள்ள 45 பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் நிலவி வருவதாகவும் அரசியல் தலையீடு காரணமாக இவை நிரப்பப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்படுவதாகவும் இலங்கை கல்வி நிருவாக அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சங்கத்தின் ஏ.எல்.முகம்மட் முக்தார் நேற்று (28) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரித்திருப்பதாவது;

கிழக்கு மாகாணத்தில் தரம் இரண்டு பாடசாலைகளில் நிலவி வருகின்ற அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி, உடனடியாக நியமனங்களை வழங்குமாறு எமது சங்கம் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரை கோரியுள்ளது.

அதிபர் பதவி வெற்றிடமாகியுள்ள 45 தரம் இரண்டு பாடசாலைகளுக்கும்



விண்ணப்பம் கோரப்பட்டு, ஒரு வருடமாகியும் இதுவரை நேர்முக பரீட்சை நடாத்தப்படாது காலம் கடத்தப்பட்டு வருகிறது.

இப்பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமனம் செய்யும் அதிகாரம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்குரியதாகும். அதன் அடிப்படையிலேயே விண்ணப்பம் கோரப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் திருமலை, மூதூர், திருமலை வடக்கு, கிண்ணியா ஆகிய கல்வி வலயங்களில் 17பாடசாலைகளிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டு, கல்குடா, பட்டிருப்பு, மட்டு மேற்கு, மட்டு மத்தி ஆகிய வலயங்களில் 16 பாடசாலைகளிலும் கல்முனை கல்வி மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, திருக்கோவில் ஆகிய கல்வி வலயங்களில் 08 பாடசாலைகளிலும் அம்பாறை வலயத்தில் 04 பாடசாலைகளிலும் அதிபர் பதவிக்கான வெற்றிடங்கள் நிலவுகிறன.

பல தடவைகள் நேர்முகபரீட்சை நடாத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள், அரசியல் ரீதியான அழுத்தங்களை பிரயோகித்து நிறுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

எனவே, அரசியல் அழுத்தங்களுக்கு அப்பால் பாடசாலைகளின் சுயாதீனத்தை பாதுகாக்க மாகாண கல்விப் பணிப்பாளர் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

# 'வட, கிழக்கு சமர்' என்ற தோணிப் பொருளில் மட்டக்களப்பு சைக்கிள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் சைக்கிள்






(க.ருத்திரன் )

'வட கிழக்கு சமர்' என்ற தொணிப் பொருளில் மட்டக்களப்பு சைக்கிள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு திருமலை வீதி ஊறனியில் நடைபெற்றது.

முன்னாள் சைக்கிள் ஓட்ட வீரர் அமரர் செல்வராஜாவின் ஞாபகார்த்தமாக இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜ.பிறேம்நாத் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன்,மாநகரமுதல்வர் ரி.சரவணபவன், கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் குமாரஸ்ரீ,மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி வி.ஈஸ்பரன்,கல்கி அறக்கட்டளை ஸ்த்தாபகர் என்.நர்மதன்,மட்டக்களப்பு மாவட்ட சமூகபற்றாளர் வி.லவக்குமார், சிறப்பு அதியாக நடேசு உதயகுமார் (சுவீஸ்) ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

காலை திருமலை வீதி பேருந்து தரிப்பிடத்திற்கு முன்னாள் ஆரம்பமான சைக்கிள் ஓட்டமானது கொழும்பு திருமலை வீதி வழியாக கல்லடி மணிக் கூட்டு கோபுர வளைவு வீதி ஊடாக வாழைச்சேனை சுற்று வளைவினை அடைந்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இடத்தினை சென்றடைந்தது. இவ் சைக்கிள் ஓட்டமானது 102 கிலோ மீற்றர் தூரம் ஓட்டமானதாகும்.

இதில் 1ஆம் இடத்தினை பி.சதீஸ்காந், 2ஆம் இடத்தினை பாலரசன்,(முல்லைத்தீவு)3 ஆம் இடத்தினை ரி.நிரல்சன்,4 ஆம் இடத்தினை ஜ.பிரேம் நாத்,5ஆம் இடத்தினை வி.பார்த்தீபன் ஆகியோர்கள் வெற்றி பெற்றனர்.

3 வருடங்கள் கடந்த நிலையில் மாவட்டத்தில் இப்போட்டி நிகழ்வு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்விற்கான அனுசரணையை எஸ்.வைகுந்தன் வழங்கியிருந்தார்.

# வன்செயல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டு காசோலைகள் வழங்கி வைப்பு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

பயங்கரவாத வன்செயல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் வணக்கஸ்தலங்களுக்கான நட்டஈட்டு காசோலை வழங்கும் நிகழ்வு அண்மையில் திகதி செங்கலடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இளப்பீடுகளுக்கான தேசிய செயலகத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பயங்கரவாத வன்செயல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் வணக்கஸ்தலங்களுக்கான நஸ்டஈட்டுக்கான காசோலைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டுவரும் நிலையில் செங்கலடி ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் வணக்கஸ்தலங்களுக்கான நஸ்ட ஈட்டுக் காசோலைகள் வழங்கும் நிகழ்வானது ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் அவர்கள் கலந்துகொண்டிருந்ததுடன், பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் வணக்கஸ்தலங்களுக்கான நஸ்டஈட்டுக்கான காசோலைகளையும் வழங்கிவைத்திருந்தார்.

இதன்போது ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 56 நபர்களுக்கும் 09 வணக்கஸ்தலங்களுக்குமாக 39,71,000 ரூபாய் பெறுமதியான நஸ்ட ஈட்டுக் காசோலைகள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், முற்போக்கு தமிழர் கழகத்தின் பிரதிநிதிகள் மற்றும் ஆலய அறங்காவலர் சபையினர், நஸ்ட ஈட்டுக் காசோலைகளை பெற வருகைதந்திருந்த பயனாளிகள் என பலரும் கலந்துகொண்டிருந்ததுடன், தமக்கான நஸ்ட ஈட்டுக்காசோலைகளை பெற்றுக்கொடுத்தமைக்காக இராஜாங்க அமைச்சருக்கும், அரசாங்கத்திற்கும் தமது நன்றியினை ஆலய அறங்காவலர் சபையினரும், ஏனைய பயனாளிகழும் இதன்போது தெரிவித்திருந்தமை .குறிப்பிடத்தக்கது.

# அந்தி பூத்த வைகறை கவிதை நூல் வெளியீட்டு விழா



ஒலுவில் எஸ்.ஜலால்டீன் எழுதிய அந்தி பூத்த வைகறை கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (27) தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீட் தலைமையில் அட்டாளைச்சேனை அல்ஸகி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கவிதை நூலினை வெளியீட்டு வைத்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை ஓய்வுநிலை பேராசிரியர் கலாநிதி ஏ.எஸ்.ஆனந்தன் கௌரவ அதிதியாகவும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல். எம்.றிபாஸ், சிறுவர் வைத்திய நிபுணர் டொக்டர் பீ.எம்.அர்ஷாத் அஹமட், தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் புவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி றபீக்கா அமிர்டீன் உள்ளிட்ட பலர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

கலாபூசணம் பாலமுனை பாறூக், எழுத்தாளர் எஸ்.எல்.மன்சூர், கவிஞர்களான சோலைக்கிளி, உமாவரதராஜன், அக்கரையூர் அப்துல் குத்தூஸ் ஆகியோர் இலக்கிய சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் கலைஞர் ஏ.எல்.அன்சார் விழா தொடர்பில் சிறப்புரையாற்றியதுடன், எழுத்தாளர்களான எம்.அப்துல் றஸ்ஸாக், சிறாஜ் மசூர், கலாநிதி எஸ்.எம்.ஐயூப் ஆகியோர் நூல் மீதான உரையினையும் நிகழ்த்தினர்.

கலை, கலாசார நிகழ்வுகளுடன் இடம் பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் இலக்கியவாதிகள், கல்வி மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள், முக்கிஸ்தர்கள் எனப்பலரும் கந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# 13 ஆவது சட்டத்தை மேலும் வலுவாக கொண்டு செல்லமுடியாமைக்கு தமிழ் தரப்பினரே முக்கிய காரணமாக இருந்திருக்கின்றனர்

## வடக்கின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் தவராசா குற்றச்சாட்டு!

(கதிரவன்)

1987 களில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டிருந்த போதிலும் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் 25 வருடங்களின் பின்னரே அது வடக்கு மக்களுக்கு கிடைக்கப்பெற்றிருந்து.

இருந்தபோதிலும் அந்த சபையின் அதிகாரத்தை பெற்றுக்கொண்டவர்களிடம் சரியன வகையில் 13 ஆவது சட்டத்தில் உள்வற்றை உள்வாங்கி அதை எமக்கு ஏற்புடையதாக்கும் வல்லமை மட்டுமல்ல அதில் அக்கறையும் இருந்திருக்கவில்லை

என சுட்டிக்காட்டியுள்ள வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா இதை தமிழர் தரப்பின் தோல்வியாகவே பார்ப்பதாகவும், இதனால்தான் 13 ஆவது திருத்தச் சட்டதிலுள்ள விடயங்கள் பல மத்தியை நோக்கி செல்வதற்கு வழிசமைத்தும் கொடுத்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில்

13 ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை பலப்படுத்தி அதனூடாக மாகாணசபைகளை பாதுகாப்பது தொடர்பான பொதுக் கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் கூறுகையில் ;

சந்திரிகா அம்மையாரது ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்ககளின் அபிலாசைகளை முற்றாக பூரணப்படுத்தக் கூடிய வகையில் கொண்டுவரப்பட்ட ஒரு திறமையான வரைபு எரிக்கப்பட்டது. குறித்த வரைபை அன்று எதிரணியிலிருந்து எரித்ததவர்களின் நிலைப்பாட்டை தவறென்று நான் கருதவில்லை.

ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறும் தரப்பினரும் அந்த வரைபை அன்றைய எதிர்த்தரப்பினருடன் இணைந்து எரித்திருந்தனர். அதை அன்று நான் நேரில் காண்டேன். இது மிகவும் ஒரு துரதிஸ்டவசமானதும் மாபெரும் தவறுமாகும். இதையடுத்த அந்த வரைபு கைவிடப்பட்டது.

அதன்பின்னர் பல முயற்சிகள் யோசனைகள் வந்திருந்தபோதும் கடந்த ஆட்சியில் தமிழர்களுக்கு எல்லா உரிமையும் வருகின்றதென கூறி ஒன்றை கொண்டுவந்தார்கள் அதுவும் நடைமுறைக்கு வரவில்லை.

அகவே தமிழ் மக்களுக்கான 13 ஆவது அதிகாரத்துடன் கூடிய சட்டத்தை மேலும் வலுவாக கொண்டு செல்லமுடியாமைக்கு தமிழ் தரப்பினரே முக்கிய காரணமாக இருந்திருக்கின்றனர் என்பதே வரலாறு.

இந்த நிலையில் தீர்வு திட்டங்கள் நடைறையில் வருவதற்கான வாய்ப்புள்ளதா என்பதை நாம் ஆராய்ந்து கொள்ள வேண்டும். அதேநேரம் இருக்கின்றதை பாதுகாத்துக்கொள்வதற்கும் முயற்சிக்க வேண்டும்.

இதேவேளை இந்த 13 ஆவது திருத்த சட்டத்தில் ஒரு முக்கிய விடயமும் இருக்கின்றது. அதை தமிழ் தரப்பினர்தான் கைநழுவ விட்டுள்ளனர் என்றே கருதுகின்றேன்.



அதாவது இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மீட்டி பாருங்கள். அதில் ஒரு சரத்தில் குறிப்பட்ட திகதியொன்றை வரையறுத்து அத்திகதியிலிருந்து ஆயுதம் தாங்கிய தரப்பினர் அல்லது குழுவினர் தமது ஆயுதங்களை ஒப்படைத்தால் இலங்கை இராணுவம் குறிப்பாக முப்படையினரும் முகாம்களுக்கள் முடக்கப்படும் என்றுள்ளது. இதை தவறவிட்டு யார்?

சுதந்திரத்திற்கு பின்னர் வேறு வேறு கொள்கைகளை கொண்ட கட்சிகளாக இருந்தாலும் பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம் என்பன ஏற்பாடு செய்யப்பட்டது. அவையும் இல்லாது போய்விட்டது. ஆனாலும் அவற்றை விட ஒரு முன்னேற்றகரமான ஏற்பாடாகத்தான் இந்த 13 ஆவது திருத்த சட்டம் இருக்கின்றது.

இதை நாம் இறுகப்பிடித்தோமா? என்றால் இல்லை. இதேநேரம் இந்த சட்டமூலத்தின் ஏற்பாட்டில் சில குரறபாடுகள் உள்ளன. ஆனால் இருப்பதையாவத பாதுகாப்போம் என்றால் அதுவும் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இணைந்த வடக்கு கிழக்கு மாகாணச உருவாக்கப்பட்டு ஒருவருடத்திற்கு சற்று கூடுதலாக சில மாதங்களே அது நடைமுறையில் இருந்தது. அதன்பின்னர் 25 ஆண்டுகள் வடக்கு கிழக்கில் மாகாணசபை இயங்கவில்லை.

ஏனைய மாகாணங்கள் இயங்கின. ஆனாலும் அதிலுள்ள அதிகாரத்தை வலுவாக்க அவர்கள் வடக்கு கிழக்கில் தமிழர்கள் மாகாண சபையை எப்போது ஏற்று நடைமுறைப்படுத்துவார்கள் என்றுதான் காத்திருந்தனர்.

இந்நிலையில் இக்காலத்தில் மாகாணத்துக்குரிய விடயங்கள் பலவற்றை மத்தி மெல்ல மெல்ல தனதாக்கிக் கொண்டது. இதனிடையே 25 வருடங்களின் பின்னர் மாகாணசபை அதிகாரத்தை பெற்றுக்கொண்டவர்கள் அதன் அதிகாரத்தை கொண்டு என்ன செய்தார்கள்? அதன் அதிகாரத்தை வலுவாக்குவதில் என்ன பங்களித்தார்கள்? வெறுமனே 440 பிரேரணைகளை கொண்டுவந்து நிறைவேற்றியதை தவிர வேறென்ன செய்தார்கள்?. மாகாண சபையின் அதிகாரத்தை முழுமையாக கொண்டுவர என்ன முயற்சிகளை செய்தார்கள்? எதுவுமே இல்லை. இது வடக்கின் ஆட்சியாளர்கள் கண்ட தோல்வி அல்லது தவறவிட்ட சந்தர்ப்பம் என ஒப்புக்கொள்ள வேண்டும்.

சரியானவர்களை அந்த மாகாண சபைக்கு தெரிவு செய்து சரியன வகையில் 13 ஆவது சட்த்தில் உள்வற்றை உள்வாங்கி அதை எமக்கு ஏற்புடையதாக்கும் வல்லமை மட்டுமல்ல அதில் அக்கறையும் அவர்களிடம் இருந்திருக்கவில்லை. இதுவும் எமது தமிழ் மக்களின் தோல்வியாகவே காணப்படுகின்றது.

சரி அதிகாரங்களை இழந்துவருகின்ற நிலையிலும் இருக்கின்ற அதிகாரங்களையாவது பாதுகாப்போம் என்றால் கூட அதற்கும் அக்கறை காட்டவில்லை.

இதேவேளை இலங்கை அரசியல் சாசனத்தின்படி மாகாணசபை கலைக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் தேர்தல் நடைபெற வேண்டும் என இருக்கின்றது. அப்படியானால் ஏன் தேர்தல் நடைபெறவில்லை? இதற்கு காரணம் என்ன?

கடந்த ஆட்சியாளர்கள் மாகாணசபை தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என கூறி அதில் எல்லை மீள் நிர்ணயம் என்ற ஒன்றை கொண்டுவந்தது.

அதை மேற்கொள்ள குழு ஒன்றை அமைத்தனர். அவ்வாறு சட்ட ஏற்பாட்டை செய்திருந்தால் துறைசார் அமைச்சர் அதை இரு வாரங்களில் நாடாளுமன்றில் சமர்ப்பித்திருப்பார். சரி அதை நிறைவேற்ற மூன்றில்; இரண்டு பெரும்பான்மை வேண்டும். அதில் அது தோல்வி கண்டிருந்தால் அதற்கும் சட்ட ஏற்பாடு இருக்கிறது. அதுவும் நடைபெறவில்லை.

இதைவிடுத்து மாகாணசபையை இல்லாதொழிக்க வேண்டும் என்பதற்காக கடந்த அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட இந்த நடமுறைக்கு பங்காளர்களாக இருந்ததும் இன்று பறிபோகின்றது என கூக்குரல் இடும் தமிழ் தரப்பினர்தான் எனபதே வேதனையானது.

அதைவிட மாகாண சபை தேர்ல் நடைபெற வேண்டும் என கடந்த ஆட்சியில் இருந்த தமிழ் தரப்பினர் நினைத்திருந்தால் குறைந்தது அதை நிவேற்ற பாதீடுகளில் பேரம் பேசியிருந்திருக்கலாம் அதையும் செய்திருக்கவில்லை. இவையே இந்த மாகாணசபை முறைமை அதிகாரங்கள் பறிபோக காரணமாகியிருந்துள்ளது. இந்நிலையில் இன்று பாரத பிரதமருக்கு கடிதம் எழுதுவதால் என்ன பலன் கிடைக்கப்போகின்றது. என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தலவாக்கலையில் மரம் விழ்ந்து இறந்த ஆசிரியருக்கு நீதிகோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை லோகி தோட்ட மக்கள் நுவரெலியா அட்டன் பிரதான வீதியில் தலவாக்கலை லோகி வழிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் பிரதான வீதியோரமாக (28) திங்கட்கிழமை காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டதில் 100 ற்கு அதிகமான மக்கள் கலந்துக்கொண்டனர்.

கடந்த (21) திகதி மாலை நுவரெலியா அட்டன் பிரதான வீதியில் தலவாக்கலை லோகி தோட்ட வழிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள 200 வருட பழமை வாய்ந்த ஆலமரமொன்றின் கிளைகளை வெட்டிக்கொண்டிருந்தபோது அதன் கிளையொன்று உடைந்து பிரதான வீதியில் சென்ற மோட்டார் சைக்கிள் மீது விழுந்ததில் அதை செலுத்திய நபர் உயிரிழுந்தார்.

தலவாக்கலை லோகி தோட்டத்தைச் சேர்ந்தவரும் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய பாடசாலையின் பிரபல கணித ஆசிரியருமான வேலுசாமி மகேஸ்வரன் (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்த ஆசிரியருக்கு நீதி வேண்டியும் 200 வருடங்கள் பழைமையான ஆலமரத்தின் கிளைகளை வெட்டுவதற்கு அனுமதி வழங்கியது யார்? குறித்த ஆலமரத்தை பாதுகாப்பற்ற முறையில் வெட்டியதன் காரணமாகவே இந்த உயிரிழப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த வழிப்பிள்ளையார் கோவிலை தனி நபர் ஒருவர் நிர்வகித்து வருகின்றார் எனவும் இக்கோவில் லோகி கூம்மூட் தோட்டத்திற்கு









சொந்தமான கோவில் இதனை ஒரு தனிநபர் வைத்துக்கொண்டு அதனை சுற்றியுள்ள நிலப் பரப்பை ஆக்கிரமிப்பு செய்து கொண்டிப்பதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது எனவே இக்கோவிலை லோகி கூம்மூட் தோட்டத்திடம் ஒப்படைக்க வேணடும்.

ஆலமரத்தின் கிளைகள் தரிக்கப்படுவதாக எவ்வித அறிவுத்தல்களையும் பிரதான வீதியில் பயணிக்கும் வாகனங்களுக்கோ வாகன சாரதிகளுக்கோ விடுக்கவில்லை. பாரிய மரம் ஒன்றை வெட்டுவதாக இருந்தால் அதற்கான சில ஒழுங்கு விதிகளை பின்பற்றி இருக்க வேண்டும். பெயர் பலகைகள் வைக்கப்பட்டு சாரதிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு இரு பக்கங்களிலும் வாகனத்தை நிறுத்தி சரியான முறையில் போக்குவரத்தை செய்வதற்கு ஊழியர்கள் மூலமாக வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி ஒன்றும் இங்கு இடம்பெறவில்லை. ஆனால் எவ்வித பாதுகாப்பு நடைமுறையும் பின்பற்றாமல் ஒரு பிரதான வீதியில் பாரிய மரம் ஒன்று வெட்டப்பட்டுள்ளது. மரம் வெட்டப்பட்டு ஒருவர் உயிரிழந்த பின்னர் அப்பகுதி கிராம சேவகர், தலவாக்கலை மற்றும் லிந்துலை பொலிஸார், தலவாக்கலை லிந்துலை நகரசபை,வீதி அபிவிருத்தி அதிகார சபை மேலும் இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவருக்கும் இது தொடர்பாக எதுவும் தெரியாது என்று அனைவரும் இதிலிருந்து நழுவ பார்க்கின்றனர். இந்த பிரதான வீதியை செப்பனிடும்போதும் மேல் கொத்மலை திட்டத்தின்போதும் கூட அக்கோவிலையோ அந்த ஆல மரத்தையோ அகற்ற யாரும் அனுமதி கொடுக்கவில்லை. வேலுசாமி மகேஸ்வரன் என்பவர் தலவாக்கலை நகரில் மிக பிரசித்தி பெற்ற ஒரு கணித ஆசிரியர். இவருக்கு 10 வயதில் ஒரு மகளும் 3 வயதில் மகனும் இருக்கின்றனர். அக்குடும்பம் ஒரு தலைவனை இழந்து வாடுகின்றது. அதுமட்டுமல்லாது தலவாக்கலை சமூகம் ஒரு சிறந்த கணித ஆசானை இழந்துள்ளது. எத்தனையோ மாணவர்களை கணித பாடத்தில் சித்தியடைய செய்த இந்த ஆசிரியருக்கு இணையாக இனியாரும் உருவாகபோவதில்லை. எனவே இதற்கு உரிய நீதி வேண்டும் இந்த கோவிலை தோட்ட நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும் அதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்க வேண்டும் என போராட்டத்தில் கலந்துக்கொண்ட மக்கள் பதாதைகளையும் கோசங்களையும் எழுப்பியவாறு இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.




# போத்துவில் பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தேய்வீக நிகழ்ச்சி

(எஸ்.சபேசன்)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பொத்துவில் பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தெய்வீக அன்புச் சிறார்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கின்ற அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு உதவிப் பிரதேச செயலாளர் ஜனாப் பிர்ணாஸ் அவர்களின் தலைமையில் பொத்துவில் குண்டுமடு சிறிமுருகன் ஆலயத்தில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் அம்பாரைமாவட்ட சிவனருள் அறப்பணி மன்றத்தின் செயலாளர் வாமதேவன் இந்து சமய கலாசார உத்தியோகத்தர்களான கு. ஜெயராஜி, என். பிரதாப் பொத்துவில் பிரதேசசெயலகத்தின் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. நிலேந்திரன் உட்பட அப்பிரதேச ஆலயங்களி தலைவர் செயலாளர் அறநெறிப்பாடசாலைகளின் ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்யுமாறு கோரும் போராட்டத்தில் அலி சப்ரிக்கு எதிராக முஸ்லீம்பெண்கள் ஆவேசம்








பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்யுமாறு கோரும் போராட்டத்தில் நீதியமைச்சர் அலி சப்ரிக்கு எதிராக முஸ்லீம் பெண்கள் ஆவேசமான முறையில் சில கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

வடகிழக்கு வாலிப முன்னணி தலைவர் கி. சேயோன் அவர்களின் ஒருங்கிணைப்பில் மட்டக்களப்பு மாவட்ட வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் முன்னணி தலைவர் லோ.தீபாகரன் அவர்களின் தலைமையில் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து போராட்டம் இடம்பெற்றது

இந்த போராட்டத்தில் ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மட்டக்களப்பு மறை.மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை மற்றும் இந்து, இஸ்லாமிய மதத்தலைவர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்முஸ்லிம் மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்குமாறு முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த போராட்டத்தில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய சமாதான கூட்டமைப்பு, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஆகிய முஸ்லிம் அரசியல் கட்சிகளும் இலங்கை ஆசிரியர் சங்கம், கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியம் உட்பட பல்வேறு பொது அமைப்புகளும் ஆதரவு வழங்கியிருந்தனர். கையெழுத்துப்பெறும் போராட்டத்தில் பெருமளவான முஸ்லிம் பெண்களும் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியிருந்தனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்குமாறு வலியுறுத்தும் போராட்டம் நடைபெற்றதுடன், குறித்த தடைச்சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே பயங்கரவாததடைச்சட்டத்தை இரத்து செய்யுமாறு கோரும் போராட்டத்தில் நீதியமைச்சர் அலி சப்ரிக்கு எதிராக முஸ்லீம் பெண்கள் ஆவேசமான முறையில் சில கருத்துக்களை முன்வைத்திருந்தமையினை அவதானிக்க முடிந்தது.

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக ரீதியிலே அரசியல் பயணத்தினை முன்னேடுத்துக்கோண்டு இருக்கின்றனர்

## பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன்

**(எஸ்.சபேசன் சுதா)**

தமிழ் இனம் இந்த நாட்டில் நிலையாக வாழவேண்டும் என்பதற்காகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக ரீதியிலே எங்களது அரசியல் பயணத்தினை முன்னெடுத்துக் கொண்டு இருக்கின்றதே தவிர வேறு எந்தச் சலுகைகளையும் பெறுவதற்கு அல்ல என் தழிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்

தமிழ் அரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் துறைநீலாவணை வாழ் மக்களுடனான சந்திப்பொன்று 27 ஆம் திகதி ஞாற்றுக்கிழமை மாலை துறைநீலாவணை பல்தேவைக் கட்டிட மண்டபத்தில் பிரதேச சபை உறுப்பினர் க.சரவணமுத்து தலைமையில் இடம்பெற்றது.

இச்சந்திப்பானது மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் முன்னணியின் செயலாளர் க.சசிந்தரன் அவர்களது ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற நிகழ்வுக்கு யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்,இலங்கை வாலிபர் முன்னணியின் தலைவர் கி.சேயோன் உட்பட பலர் கலந்து கொண்டனர்



அவர் மேலும் பேசுகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது மக்கள் நலன் சர்ந்தவிடயங்களை முன்னெடுக்குமே தவிர எவ்வித சலுகைக்காகவும் ஆசாபாசங்களுக்காகவும் தனிப்பட்ட நலனுக்காகவோ சோரம்போகக் கூடியவர்கள் நாங்கள் இல்லை.

இந்த நாட்டிலே அரசின் அடாவடித்தனங்களுக்கு எதிராக குரல்கொடுப்பதற்கு யாரும் இல்லை இதனால் நாமே எதிர்த்து குரல்கொடுத்துக் கொண்டிருக்கின்றோம் தமிழ் மக்களின் உரிமையினை ஜனநாயகரீதியில் பெறவேண்டும் என்பதற்காக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை தமிழர்களினால் முன்னெடுத்த எழுச்சிப் பேரணி சர்வதேசத்தின் பார்வைக்கு எடுத்துச்சென்று இருக்கின்றது.

இதே போன்றுதான் கடந்த 3 ஆம் திகதியில் இருந்து இலங்கை தமிழரசுக்கட்சியின் வாலிபர் முன்னணியினால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்கக்கோரி கையெழுத்து சேகரித்து இச்சட்டத்திற்கு எதிர்ப்பினைத் தெரிவித்து சர்வதேசம் வரை எடுத்துச்செல்ல இருக்கின்றோம். இந்த பயங்கரவாதச் சட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் அதிலும் பெரிதும் பாதிக்கப்பட்ட கிராமம் துறைநீலாவணைக் கிராமமாகும் இக்கிராமத்தில் வசித்தவர்கள்தான் எல்லைக்கிராமங்களில் குடியேறி வாழ்ந்த போது பயங்கரவாதத் தடைச் சட்டம் என்றபோர்வையில் குடியேற்றக் கிராமங்கள் அழிக்கப்பட்டதுடன் அங்கு வாழ்ந்த மக்கள் விரட்டி அடிக்கப்பட்ட வரலாறுகளும் நடந்தேறியுள்ளன. இருந்தும் இக்கிராமமக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் நெருங்கி இருந்தமையால் அபிவிருத்தியில் பின்தள்ளப்பட்டு இருந்தனர் ஆனால் எதிர்காலத்தில் எமது அரசியல் தலைவர்கள் அபிவிருத்திகளை முன்னெடுப்பார்கள் அதில் எவ்வித மாற்றமும் இல்லை என்றார்.

# தாய்மாருக்கும் பிள்ளைகளுக்கும் நாட்டின் அசாதாரண நிலைமையை கருத்தில் கோண்டு உடுதுணியும் பணமும் வழங்கல்

**(எஸ்.சபேசன்)**

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உட்பட்ட கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவால் மூடப்படும் நிலையில் உள்ள பாடசாலைகளை கருத்தில் கொண்டு 2016 சிறுவர்கள் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு நரிப்புல் தோட்டம் என்னும் கிராமத்தில் இரண்டு பிள்ளைகளுக்கு மேல் மூன்றாவது குழந்தையினை பெற்றெடுத்த 5 தாய்மாருக்கு தலா ரூபாய் 10,000 வழங்கப்பட்டதுடன் பிள்ளைகளின் 18 வயது வரை மாதம் ஒன்றிற்கு ரூபா 1000 வங்கியில் வைப்புசெய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மேலும் மகிழவட்டவான், பங்குடாவெளி, விழாவட்டவான், நெல்லூர், சொறுவாமுனை, மணிப்பூர், ஆகிய கிராமங்கள் உள்வாங்க பட்டுள்ளது




குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் தொடங்கி 6 ஆவது ஆண்டு காலடிபதித்த இவ்வேளையில் இத்திட்டத்தின் கீழ் 132 தாய்மார்கள் உதவி தொகை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. நேற்று 27.02.2022 மேலும் 17 தாய்மார்கள் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்க பட்டுள்ளனர் இன்று இத்திட்டத்தின் கீழ் உதவி தொகை பெற்று வரும் அனைத்து தாய்மாருக்கும் பிள்ளைகளுக்கும் நாட்டின் அசாதாரண நிலைமையை கருத்தில் கொண்டு உடுதுணியும் ரொக்கப்பணமும் வழங்கப்பட்டது. இந்த உதவித்தொகை சுவிஸ் அறம் (swiss Aram)என்னும் அமைப்பின் ஊடாக வழங்கப்பட்டது. 6 வருடகாலமாக இத்திட்டத்திற்கு உதவி செய்யும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் சுவிஸ் அறம் அமைப்பு நன்றியை தெரிவித்ததுடன் மேலும் உதவி தொடர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பிரதி கல்வி பணிப்பாளர் திரு.மகேந்திரகுமார், பட்டிருப்பு கல்வி நிர்வாக பிரிவு, மற்றும் பிரதி கல்வி பணிப்பாளர் தாபன மற்றும் பொது முகாமைத்துவம், மடடக்களப்பு, திரு.க.ஹரிகரராஜ் , இத்திட்டத்திற்கு எல்லா வகையிலும் முழு ஒத்துழைப்பை வழங்கி வருகிற சுவிஸ் வாழ் திருமதி சிவசாந்தி அமிர்தலிங்கம் , ஆசிரியர்திரு. வே.சசிகரன் ,கிராம அபிவிருத்தித் தலைவர், கோவில் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், பெரியோர்கள் தாய்மார்கள் ஊர்மக்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

# நிந்தவூர் பிரதேச சபையின் பேப்ரவரி மாதத்திற்கான 04 வது சபையின் 47 வது கூட்டமர்வு



**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச சபையின் 2022 பெப்ரவரி மாதத்திற்கான 04 வது சபையின் 47வது கூட்டமர்வு திங்கட்கிழமை(28) முற்பகல் நடைபெற்றது.

நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம் தாஹீர் தலைமையில் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமர்வுவின் போது மத அனுஸ்டானம் இடம்பெற்ற பின்னர் 2022 ஜனவரி மாதத்திற்கான கூட்டறிக்கை உறுதிப்படுத்தல் 2022 ஜனவரி மாதத்திற்கான கணக்கறிக்கை உறுதிப்படுத்தல் தவிசாளர் எம் .எ . எம் தாஹிர் உரை என்பன தொடர்ச்சியாக இடம்பெற்றன.

பின்னர் நிந்தவூர் பகுதியில் எல்.டி.எஸ்.பி வேலைத்திட்டம் தொடர்பில் உறுப்பினர்களின் கருத்துக்கள் சபையில் தவிசாளரினால் கேட்கப்பட்டது.அத்துடன் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கடிதங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு இறுதியாக சபை நடவடிக்கை கொரோனா விதிமுறைக்கமைய சிறப்பாக நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# திருட வந்தவர் வயோதிப பேண்ணை கோலை செய்ய முயற்சி

**(ந.குகதர்சன்)**

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை விதவைகள், அனாதைகள் ஒய்வூதியம் பெறும் தாய் ஒருவரின் வீட்டில் அவரை கொலை செய்யும் முயற்சி இடம்பெற்றுள்ள நிலையில் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை எஸ்.எல்.ஹாஜியார் வீதியில் வசித்து வந்த ஒய்வூதியம் பெறும் 70 வயதுடைய வயோதிப பெண் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த திருடன் அத்தாயின் காதினை அறுத்ததுடன், உன்னிடம் உள்ள மாலை தா என்று கழுத்தினை நெறுக்கியதுடன், சத்தம் போட்ட போது வாயில் அடித்து பல்லினை உடைத்துள்ளார். இச்சந்தர்பத்தில் பக்கத்து அறையில் உறங்கிக் கொண்டிருந்த அத்தாயின் சகோதரியின் மகன் அழுகுறல் சத்தம் கேட்டு சாச்சி என்று சத்தம் எழுப்பிய போது திருடன் தப்பி சென்றுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக திருடனின் அடையாளங்களை உறவினர்கள் தெரிவித்ததற்கமைய வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வு பிரிவினர் மற்றும் வாழைச்சேனை பொலிஸாரின் உதவியுடன் அப்பகுதியிலுள்ள 21 வயதுடைய இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் காயமுற்ற வயோதிப பெண் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன், குறித்த தாயிடம் இருந்த திருடப்பட்ட நகைகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்தோடு வாழைச்சேனை தபால் நிலைய வீதியில் தூக்கத்தில் இருந்த பெண்ணின் கை பட்டியை அறுத்து திருடிச் சென்றுள்ள சம்பவமும் நேற்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் திருட்டுச் சம்பவமும், அதனுடன் இணைந்து கொலை முயற்சியும் இடம்பெற்று வருவதால் பிரதேச மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர். இவ்வாறான திருடர்கள் மீண்டும் எங்கள் பிரதேசத்தில் திருடாமலும், கொலை முயற்சி செய்யாமலும் இருப்பதற்கு வாழைச்சேனை பொலிஸ் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சிவராத்திரியின் மகிமை!

**உணவையும் உறக்கத்தையும் விலக்கினால் புலன்கள் தானாக அடங்கும், அப்போது இறையுணர்வு பெறமுடியும் நினைத்த காரியம் சித்தியாகும்.!**

இந்துக்களின் முழுமுதற்கடவுளாம் சிவபெருமானை நினைந்து வழிபடும் மிகவும் பிரதானமான முக்கிய விரதம் சிவராத்திரி விரதமாகும்.மாசி மாதம் கிருஷ்ண பக்ஷ தேய்பிறை சதுர்த்தி தினத்தில் மகா சிவராத்திரி கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு மகா சிவராத்திரி மார்ச் 1ம் தேதி கொண்டாடப்படுகிறது.

சிவலிங்கத்திற்கு அபிஷேக அலங்காரம் சிறப்பு பூஜை செய்ய முடியாவிட்டாலும் ,அருகில் உள்ள சிவன் ஆலயத்தில் அன்றைய தினம் நடக்கும் சிறப்பு பூஜையில் கலந்து கொள்வது நல்லது.

மகா சிவராத்திரி அன்று எப்படி விரதம் இருக்க வேண்டும் சிவனுக்கு என்னென்ன பொருட்களால் அபிஷேகம் அலங்காரம் செய்ய வேண்டும் என்பதை 'மகா சிவராத்திரி கற்பம்' என்ற சிறிய நூலில் விளக்கப்பட்டுள்ளது.

மனிதனுக்குத் தேவையான உணவு நல்ல தூக்கம், இந்த இரண்டையும் விலக்கி சிவனுக்காக நாம் விரதமிருப்பது தான் இந்த நாளின் நோக்கமாகும். உணவையும் உறக்கத்தையும் விலக்கினால் புலன்கள் தானாகவே அடங்கும். அப்போது இறையுணர்வு பெற முடியும். நினைத்த காரியம் சித்தி ஆகும்.

ஆனாலும் அனைவராலும் விரதம் இருக்க முடியாது என்பது நிதர்சனம். குழந்தைகளும்இ பெரியவர்களும் அவர்கள் உடல் நிலையைப் பொறுத்து உணவு எடுத்துக் கொள்வது அவசியம் தான். சிவ பெருமான் ஆரவாரத்தை விரும்பாதவர் .ஏகாந்தம் .முற்றிலும் அமைதி இவர் விரும்புவது அமைதி.

மஹா சிவராத்திரி அன்று சிவபுராணம், கோளறு பதிகம் லிங்காஷ்டகம் ,பஞ்சாட்சர ஸ்தோத்திரம், நடராஜப் பத்து, பரமசிவன் ஸ்தோத்திரங்களைப் படிக்கலாம்.

சிவராத்திரியன்று பஞ்சாட்சர மந்திரம் உச்சரிப்பதால் மற்ற நாள்களில் நூறு முறை பஞ்சாட்சரம் ஜெபித்த பலன் கிட்டும் என்கிறது சாஸ்திரம்.

ஆன்ம தரிசனம் தேடும் சிவ பித்தர்கள் மாலை 6 மணிக்குள் குளித்து விட்டு ,உணவு முடித்து விட்டு கோவிலுக்கு செல்லுங்கள். பணியில் உள்ளவர்கள் வேலையை முடித்து விட்டு குளித்து விட்டு கோவிலுக்கு சென்று அமைதியாக ஒரு இடத்தில அமர்ந்து சிவ சிந்தனைகள் செய்தலே போதுமானது.

சிவராத்திரி அன்று மனதில் சொல்லவேண்டிய மந்திரம்:'சிவாய நம ஓம் சிவாய வசி ஓம் சிவ சிவ சிவ ஓம் '

' சிவ பெருமான் ஆலகால விஷத்தை உட்கொண்டதால் அவரோட உடல் மிகவும் வெப்பமாக மாறி விடுவதாக ஐதீகம். அந்த வெப்பத்தைத் தணிப்பதற்காகவே அவருக்குப் பல்வேறு வகையான பொருட்களைக் கொண்டு அபிஷேகம் செய்கிறோம்.

தேன், பால் ,தயிர், நெய் ஆகியவற்றால் அபிஷேகம் செய்வது எண்ணற்ற பலன்களைக் கொடுக்கக் கூடியது.



**மகாசிவராத்திரி முக்கியத்துவம்**

இந்து புராணங்களின்படி மஹாசிவராத்திரி அன்று சிவபெருமானுக்கும் பார்வதி மாதாவுக்கும் திருமணம் நடந்ததாக நம்பப்படுகிறது. மகாசிவராத்திரியின் சிறப்பு சந்தர்ப்பத்தில் சிவபெருமானைக் கவர பக்தர்கள் விரதம் இருப்பார்கள். பார்வதி மாதாவைப் போல விரும்பிய வரன் கிடைக்க பெண்கள் அனைத்து சடங்குகளையும் பின்பற்றி விரதம் கடைப்பிடித்து பூஜை செய்கிறார்கள்.

**மகாசிவராத்திரி பூஜை நேரம்**

இந்த ஆண்டுஇ மகாசிவராத்திரிக்கு உகந்த நாள் மார்ச் 1 செவ்வாய்கிழமை அதிகாலை 3.16 மணிக்கு தொடங்குகிறது. சதுர்த்தசி திதி மார்ச் 2 புதன்கிழமை காலை 10 மணிக்கு முடிவடைகிறது.

மகாசிவராத்திரி பூஜை நான்கு கட்டங்களாக அனுசரிக்கப்படுகிறது. நான்கு நிலைகளில் வழிபடுவதற்கான மங்களகரமான நேரம்:



முதலாம் சாம பூஜை: மார்ச் 1ம் தேதி மாலை 6.21 மணி முதல் இரவு 9.2% மணி வரை

இரண்டாம் சாம பூஜை: மார்ச் 1 இரவு 9.27 முதல் நள்ளிரவு 12.33 வரை

மூன்றாம் சாம பூஜை: மார்ச் 2ம் தேதி நள்ளிரவு 12:33 மணி முதல் 3.39 மணி வரை நான்காம் சாம பூஜை: மார்ச் 2 காலை 3:39 முதல் 6:45 வரை

இந்த நாளில் மக்கள் மஹா மிருத்யுஜ்ய மற்றும் சிவ மந்திரத்தை ஓதுவார்கள்.சிவன் மந்திரம்: ஓம் நமசிவாய

நாம் சிவராத்திரி தினத்தில் விரதமிருந்து சிவபெருமானை வழிபட்டால் நாம் செய்த பாவங்கள் நீங்கி நமக்கு முக்தி கிடைக்கும் என்பது ஐதீகம்.

**மகா சிவராத்திரி வழிபாடு எப்போது தோன்றியது?**

பிரளய காலத்தில் பிரம்மனும் அவரால் படைக்கப்பட்ட அனைத்து ஜீவன்களும் அழிந்து விட்டன. அந்த மோசமான இரவுப் பொழுதில் அன்னை உமாதேவி ,சிவபெருமானை நினைத்து விரதமிருந்து பூஜித்து வந்தார்.

**சிவனை நினைத்தாலே நம் வாழ்க்கை மாறும்**

அதோடு இரவில் நான்கு ஜாமங்களிலும் ஆகம விதிப்படி சிவனுக்கு உரிய அபிஷேக அலங்கார அர்ச்சனை செய்து வழிபட்டார். வழிபாட்டின் முடிவில் அம்பிகை சிவனை வணங்கி வேண்டிக் கொண்டார்.

தான் பூஜித்த இந்த இரவு 'சிவராத்திரி' என்று கொண்டாடப்பட வேண்டும். அப்படிப்பட்ட அற்புத நாளில் தேவர்களும் மனிதர்களும் சிவ ராத்திரி என்ற பெயரில் ஈசனை விரதமிருந்து வழிபடும் முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

வாழ்விலும் உலகிலும் உள்ள 'இருள் மற்றும் அறியாமையை வெல்வதை' நினைவூட்டும் வகையில் மகா சிவராத்திரி அனுசரிக்கப்படுகிறது. பெரும்பாலான பண்டிகைகளைப் போலன்றி, இரவில் கொண்டாடப்படுகிறது மற்றும் ஒரு புனிதமான நிகழ்வாகும்.

இந்து புராணத்தின் படி, பிரம்மாவும் ,விஷ்ணுவும் யார் மிகவும் சக்தி வாய்ந்த கடவுள் என்று வாதிடுவதில் மும்முரமாக இருந்தனர். இதைக் கேட்ட சிவன் ஒரு பெரிய லிங்க வடிவில் காட்சியளித்தார். எரியும் நெருப்பின் முடிவை முதலில் கண்டுபிடிப்பவர் இந்துக் கடவுள்களில் பெரியவராகக் கருதப்படுவார் என்பது பிரம்மா மற்றும் விஷ்ணுவுடன் ஒப்புக் கொள்ளப்பட்டது.

விஷ்ணு பன்றி வடிவில் லிங்கத்தின் அடிப்பகுதியைத் தேடத் தொடங்கினார். பிரம்மா அன்னம் வடிவில் மேல் தேடத் தொடங்கினார். பல வருடங்களாக தேடியும் ஒரு முடிவு கிடைக்கவில்லை மேலும் இருவரும் சிவபெருமானை மிகவும் சக்திவாய்ந்தவராக ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

மலர்கள், தூபங்கள் மற்றும் பிற பிரசாதங்கள் செய்யப்படுகின்றனஇ அதே நேரத்தில் பக்தர்கள் நாள் முழுவதும் 'ஓம் நம சிவாய'என்ற புனிதமான பஞ்சாக்ஷர மந்திரத்தை உச்சரிக்கின்றனர்.

**வில்வ மரம்**

வில்வ மரம் என்றும் அழைக்கப்படும் பெல் மரத்தை சிவபெருமான் விரும்புவதாக நம்பப்படுகிறது மேலும் அதன் இலைகள் மற்றும் பழங்கள் அவரது வழிபாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**மஹா சிவராத்திரியன்று செய்ய கூடாதவை!**

1.பக்தர்களுக்கு உணவு அளிப்பது

2.சிவ வழிபாட்டில் குங்குமம் அதிகம் பயன்படுத்தப்படுத்தக் கூடாது...

3.. சிவனுக்கு துளசி இலைகளை அர்ப்பணிக்கக்கூடாது. அப்படி அர்பணிக்காமல் இருப்பதற்கு ஒரு காரணம் சொல்லப்படுவதுண்டு. துளசியின் மணாளனான ஜலந்தர் எனும் அரக்கனை சிவபெருமான் வதைத்த காரணத்தால். சிவபெருமானைதன்னுடைய இலைகள் கொண்டு வழிபடக்கூடாது துளசி சபித்தாக புராணங்கள் கூறுகின்றன...

4. சங்கரரை வழிபடும் போது சங்கு ஊதக்கூடாது. தண்ணீரைப் பிரதிஷ்டை செய்யக்கூடாது.

5. உடைந்த அரிசியை சிவபெருமானுக்கு ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது. அது போல அரிசி நன்கு தூய்மையாகவும் இருக்க வேண்டும்.

சிவப்பு மலர்கள் கடவுளால் சபிக்கப்பட்டவை என்பது நம்பிக்கை. அதனால்தான் சிவபெருமானுக்கு சிவப்பு மலர்களை அர்ப்பணிக்கக்கூடாது...

சிவராத்திரியை முறைப்படி அனுஸ்ட்டித்து வாழ்வில் உய்வோமாக.



உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)






# தமிழர் இனப்பிரச்சினையைத் தீர்க்கவல்ல சிங்களத் தலைவர்கள் எவரும் இந்நாட்டில் இல்லை

## இதுதான் சுதந்திரத்தின் பின்னரான 74 வருடகால வரலாறு



**ஜி.ஸ்ரீநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு**

> **உண்மையான தமிழ்த்தலைவர்கள் தமிழமக்களுக்காக ஒன்றுபட்டு இப்பொறிமுறையை முறையாகக் கையாளவேண்டும். அதேவேளை கெடுபிடியான அடிப்படைவாத ஆட்சியர்களோடு, எடுபிடிகளாக ஊதுகுழல்களாக இருந்து பிழைப்புவாத சுயநல அரசியல் நடாத்தும் போலியான தமிழ் அரசியல்வாதிகள் தமிழ்மக்களின் உரிமைகளை அடைமானம் வைத்து சலுகைகளை அனுபவிக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் ஆளும் வர்க்கத்திற்கு நற்சாட்சிப்பத்திரம் வழங்கி பாராட்டி வருவதும் தமிழர்களைக் காட்டிக்கொடுக்கும் சுயநல அரசியலாகவே அமைகின்றது. இவர்களுக்கு உழைப்பும் பிழைப்பும் வருவாயும் போலிக்கௌரவமுந்தான் அரசியலாக அல்லது அரசியல்வியாபாரமாகியுள்ளது**

இலங்கையில் தமிழர்களுக்கான இனப்பிரச்சினை 1920 இல் பிரித்தானிய ஆட்சியாளர்களின் பிரித்தாளும் தந்திரத்தின் மூலமாக உருவாக்கப்பட்டது. அதாவது 1919 இல் தோன்றிய இலங்கைத் தேசிய காங்கிரசின் தலைவராக சேர்.பொன். அருணாசலம் அவர்கள் மூவினத்தவரின் விருப்புடன் தெரிவு செய்யப்பட்டார்.

அந்தவகையில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் இலங்கை மக்களது ஐக்கியத்தின் சின்னமாக விளங்கியது. இப்படியான மூவின ஐக்கிய இயக்கம் பிரித்தானிய ஆட்சிக்கு சவாலாக அமையும் என்பதற்காக, வில்லியம் மனிங் தேசாதிபதி சூழ்ச்சி மூலமாக இலங்கைத்தேசிய காங்கிரசிலுள்ள தமிழ் சிங்களத் தலைவர்கள் மத்தியில் பிரித்தாளும் தந்திரத்தைப் பயன்படுத்திப் பூசலை ஏற்படுத்தினார்.

சட்ட நிரூபண சபைக்கான மேல்மாகாணப் பிரதிநிதித்துவம் ஒன்றினை அதிகரித்து விட்டு, அதனைப் பெறுவதில் சிங்கள தமிழ்த் தலைவர்கள் மத்தியில் போட்டியை ஏற்படுத்தினார். சிங்களத் தலைவர்கள் ஏற்கனவே தமிழ்த் தலைவர்களுடன் செய்து கொண்ட விட்டுக்கொடுப்பு ஒப்பந்தத்தினை மீறினர். இதனால் அதிகரித்த பிரதிநிதித்துவத்தை விட்டுக் கொடுக்காததால், இலங்கைத் தேசியகாங்கிரசிலுள்ள தமிழ்த்தலைவர்கள் பிரிந்து சென்று சேர் பொன்.அருணாசலம் தலைமையில் 1921 இல் தமிழ் மகாசபையினை உருவாக்கினர். இப்பிளவுடன் சிங்களவர், தமிழர் இனப்பிரச்சினைக்கான பலமான அத்திவாரம் இடப்பட்டது.

இதனை பிரித்தானிய ஆட்சியாளர் ஆரம்பித்துவைக்க சிங்களத் தலைவர்கள் இனவாத மதவாத கட்டுமானங்கள் மூலமாக தமது அரசியல் இலாபத்திற்காக மாறி மாறிக் கட்டமைத்து வளர்த்து விட்டனர். 1931, 1955, 1957, 1965, 1981 காலப்பகுதிகளில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. சிங்கள அடிப்படை வாத அரசியல் இலாப சிந்தனை எந்த முயற்சியையும் வெற்றி பெறவிடவில்லை.

1947 இல் ஆட்சியமைத்த ஐக்கிய தேசியக் கட்சியினர் பிரசாவுரிமைச்சட்டம், வாக்குரிமைச் சட்டம், கல்லோயா சிங்கள குடியேற்றத்திட்டம் மூலமாக தமிழர் இனப்பிரச்சினையை மேலும் வளர்த்து விட்டனர். மேலும் பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.ஆர்.ஜெயவரதனா கண்டிப் பாத யாத்திரை செய்து சிங்கள இனவாதத்தை எரிய வைத்தார். பண்டா-செல்வா ஒப்பந்தமும் கிழித்தெறியப்பட்டது. அத்தோடு டட்லி - செல்வா ஒப்பந்தம் டட் ளி சேனநாயக்கவால் கைவிடப்பட்டது. மாவட்ட அபிவிருத்திச்சபை முறையும் அதிகாரமற்றதாக்கப்பட்டு சீரழிக்கப்பட்டது. இவையெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சியின் கையாலாகாத தன்மைகளைக் காட்டியது. திம்புப் பேச்சுவார்த்தையினையும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் குழப்பியது. அதை விட மாகாணசபை முறையும் பலவீனமாக்கப்பட்டது. அதன் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் பறிக்கப்பட்டது. ஆயின் வலதுசாரிப் போக்குடைய ஐக்கியதேசியக்கட்சியானது தனது அதிகார காலத்தில் இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் வளர்த்து விட்டது.


இலங்கைக்கு சமஷ்டித் தீர்வு பொருத்தமானது என்று ஆரம்பத்தில் கூறிவந்த, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரும் முன்னாள் பிரதமருமான பண்டாரநாயக்க தனிச்சிங்களச்சட்டம், பண்டா-செல்வா ஒப்பந்தத்தினை அமுல்படுத்தாமை மூலமாக இனப்பிரச்சினைக்கு மேலும் தீ மூட்டினார். மேலும், ஸ்ரீமாவோ அம்மையார் லங்கா சமசமாசக் கட்சி, கம்யூனிசக்கட்சி என்கின்ற இடது சாரிக்கட்சிகளுடன் கூடி 1970 இல் ஆட்சியமைத்த பின்னர் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினைக் கொண்ட முதலாம் குடியரசு யாப்பினை 1972இல் வரைந்ததோடு தமிழர்களின் ஆறு அம்சக்கோரிக்கையை நிராகரித்து தமிழரின் இனபபிரச்சினையை மேலும் எரியவைத்தார். மிதவாத இடதுசாரிகளாகக் காட்டிய சுதந்திரக்கட்சியினரை தவிர்த்தாலும் இடதுசாரிகளாக வலம்வந்த லங்கா சமசமாசக்கட்சியினர், கம்யூனிசக் கட்சியினர் மீது தமிழ்மக்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். அந்த நம்பிக்கையை கொல்வின் ஆர்டி சில்வா வரைந்த முதலாம் குடியரசு அரசியல் யாப்பு இல்லாமலாக்கியது. எனவே சிங்கள இடதுசாரிகளாவது தமிழரின் பிரச்சினை விடயத்தில் நியாயமாக நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை தகர்ந்துபோனது. இந்த இடது சாரிகளின் ஆட்சிக்காலத்தில் சிங்களம், பௌத்தம் மேலோங்கி நிற்க பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல், தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்களத்தியேற்றம், தொழில்வாய்ப்பில் பாரபட்சம், சிங்களம் தெரியாத தமிழ் கிராமஉத்தியோகத்தர் இடைநிறுத்தம் என்று பல சிங்கள அடிப்படைவாதக் கெடுபிடிகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. சுதந்திரக் கட்சியின் ஊடாகப் பொதுசனமுன்னணி என்ற பரிமாணத்தில் 1994 இல் ஆட்சிக்கு வந்த சந்திரிக்கா அம்மையார் தமிழ் மக்கள் மத்தியில் சமாதான தேவதையாகக் காட்டப்பட்டார். தீர்வுப்பொதி மூலமாகப் பிராந்திய சபைகளைத் தரப்போகின்றார் என்று கூறப்பட்டது. 1994-2005 வரை ஆட்சி செய்த அம்மையார் கூட சமாதானப்புறாவாகக் காட்சியளித்துப் பின்னர் பொறுமை இழந்து சண்டக்கோழியாக மாறினார்.

2005 - 2015 களில் ஆட்சி செய்த, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியாக ஆட்சிக்கு வந்த மகிந்த ராஜபக்சஅவர்கள் யுத்த மௌனிப்பின் பின்னர், 13 பிளஸ் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தரப்போவதாகக் கூறினார். அதுவும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனிடம் இந்த உத்தரவாதம் அளித்த பின்னர் அவரையே ஏமாற்றினார். 2015 - 2019 காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி என்பன கூட்டாட்சி செய்தன. பாராளுமன்றத்தினை அரசியல் யாப்பு நிருணய சபையாக மாற்றி இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதனை மகிந்தவுடன் இணைந்து மைத்திரி பாலசிறிசேனா குழப்பி விட்டார். 2019 இல் ஆட்சிப்பீடமேறிய ராஜபக்ச அரசாங்கம் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் குறியீடாகச் செயற்படுகின்றது.

சோறும் தண்ணியுந்தான் தமிழரின் பிரச்சினை என்று அவரது விவசாய அமைச்சர் தமிழரைப் பரிகாசம் செய்கின்றார். இவ்வாறு தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் டிஎஸ் சேனநாயக்க, ட்ட்ளி சேனநாயக்க, பண்டாரநாயக்க, ஸ்ரீமாவோ, ஜயவர்தனா, பிரேமதாச, விஜேதுங்க, சந்திரிக்கா, ரணில், மகிந்த, ஜனாதிபதி கோதாபாய ராஜபக்ச என்று அனைத்துத் தலைவர்களும் அன்று தொட்டு இன்று வரை அக்கறையற்றவர்களாக அல்லது தீர்க்க விரும்பாதவர்களாக இருந்து வந்துள்ளனர். சுதந்திரம் அடைந்து கடந்த %4 ஆண்டுகளும் சிங்கள பௌத்த தேசியவாதம் என்ற அடிப்படை வாதத்தின் மூலமாக ஆட்சி செய்வதில் காட்டுகின்ற ஆர்வம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் காணப்டுவதில்லை. அல்லது தேசிய இனப்பிரச்சினையை அரசியல் முதலீடாக வைத்து, தமிழ்த் தலைவர்களை வில்லர்களாக்கி, சிங்களத் தலைவர்கள் தம்மைத்தாமே கதாநாயகர்களாக்கி நடாத்துகின்ற அரசியல் சினிமாவாக இலங்கை அரசியல் அமைந்துள்ளது. நாடு எக்கேடு கெட்டாலும் இந்த ஹீரோ-வில்லன் அரசியல்தான் %4 ஆண்டுகளாக நடைபெறுகின்றன. இந்த அரசியல் ஆளும் தரப்பினருக்கு கொள்ளை இலாபமீட்டும் அரசியல் வியாபாரமாகவும் அமைந்துள்ளது.

கொள்வனவுகள், இறக்குமதிகள், கொந்துறாத்துகள், கையூட்டுகள், மண் கருங்கல் வியாபாரங்கள் மூலமாக அதிகார வர்க்கத்தினர் முதலாளிகளாக, தனவந்தர்களாக மாறிவருகின்றனர். ஆனால் நாட்டையும், மக்களையும் கடன்கள் விழுங்கிக்கொண்டிருக்கிறன. நாட்டின் வளங்கள் அந்நிய நாடுகளுக்கு விற்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மொத்தத்தில் நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்க்கவல்ல தலைவர்களோ புத்திஜீவிகளோ மத்த்தலைவர்களோ மனப்பாங்கர்களோ இந்த நாட்டில் எவரும் இல்லை. இதுதான் இலங்கையின் துயரமான கறைபடிந்த 74 ஆண்டுகள் வரலாறாகும். அதற்குள் சுதந்திர தினங்கள் மாத்திரம் விர்சையாகக் கொண்டாடப்படுகின்றன. எனவேதான் இந்த நாட்டில் தேசிய இனப்பிரச்சினை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, அரசியல்கைதிகளின் பிரச்சினை, காணி அபகரிப்புப்பிரச்சினை, பாரபட்சப்பிரச்சினை போன்ற இனோரன்ன பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உள்நாட்டுப்பொறிமுறைகள் எதுவும் இல்லை. மாறாக இப்படியான பிரச்சினைகளை அரசியல் முதலீடாக்கும் அடிப்படைவாதப் பொறிமுறைகளே இந்த நாட்டில் அதிகாரவர்க்கத்திடம் அதிகமாகவுள்ளது. இதனால்தான் இலங்கையின் தமிழ்மக்கள் மட்டுமல்ல கத்தோலிக்க மதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வணக்கத்துக்குரிய பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்களும் சர்வதேசப்பொறிமுறையை நாடவுள்ளார். நிகழ்காலத்தில் மட்டுமல்ல எதிர்காலத்திலும் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கவல்ல பல்லின ஆளுமையுள்ள ஆற்றலுள்ள சிங்களத்தலைவர்கள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் இல்லை. தமிழர்களை அடக்கி ஒடுக்கி ஆட்சி செய்தால்தான் தேர்தலில் சிங்கள மக்களின் வாக்குகள் அதிகமானவற்றை வசூலிக்கலாம் என சிங்கள அடிப்படைவாதத்தலைவர்கள் உறுதியாக நம்புகின்றார்கள். எனவே தமிழர்களுக்கு இருக்கின்ற ஒரேவழி சர்வதேசப்பொறிமுறை ஒன்றேதான்.

எனவே உண்மையான தமிழ்த்தலைவர்கள் தமிழமக்களுக்காக ஒன்றுபட்டு இப்பொறிமுறையை முறையாகக் கையாளவேண்டும். அதேவேளை கெடுபிடியான அடிப்படைவாத ஆட்சியர்களோடு, எடுபிடிகளாக ஊதுகுழல்களாக இருந்து பிழைப்புவாத சுயநல அரசியல் நடாத்தும் போலியான தமிழ் அரசியல்வாதிகள் தமிழ்மக்களின் உரிமைகளை அடைமானம் வைத்து சலுகைகளை அனுபவிக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் ஆளும் வர்க்கத்திற்கு நற்சாட்சிப்பத்திரம் வழங்கி பாராட்டி வருவதும் தமிழர்களைக் காட்டிக்கொடுக்கும் சுயநல அரசியலாகவே அமைகின்றது. இவர்களுக்கு உழைப்பும் பிழைப்பும் வருவாயும் போலிக்கௌரவமுந்தான் அரசியலாக அல்லது அரசியல்வியாபாரமாகியுள்ளது. தமிழ்மக்கள் இந்தக் கட்சிமாறிகள் கொள்கைமாறிகள் எடுபிடிகள்மீது எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இப்படியான போலிகளை வளர்ப்பதென்பது சிங்கள அடிப்படைவாத அதிகாரவர்க்கத்திடம் தமிழர்களை அடைமானம் வைப்பதற்கான அனுமதியாக அமைந்துவிடும். %4 ஆண்டுகள் தமிழர்க்குக் கிடைத்த பட்டறிவுப் படிப்பினை என்னவென்றால் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கவல்ல தலைவர்கள் எவரும் இலங்கையில் இல்லை என்பதுதான்.



# திருக்கோணேஸ்வரத்தின் புனிதம் பாதுகாக்கப்பட வேண்டும்

**எப்.முபாரக்**

பல ஆயிரம் வருடங்கள் தொன்மையான வரலாற்றைக் கொண்ட திருக்கோணேஸ்வர ஆலயத்தையும் அதன் பகுதிகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இனம், மதம், மொழிகளுக்கு அப்பால் அனைவருக்கும் இருக்கின்றது. காரணம் இது இலங்கை மக்களுக்கான பொக்கிஷமாகும். அத்துடன் இவ் ஆலயம் ஆகம விதிப்படி அமையப்பெற்ற ஒரு புராதன ஆலயமாகும். இந்து ஆலங்களின் கட்டுமானங்கள் எப்போதும் விஞ்ஞான, மெய்ஞான அடிப்படையை கொண்டவை.

இவ் ஆலயத்தின்மீது இந்துக்கள் மட்டுமல்லாது பௌத்தர்களும் இஸ்லாமியர்களும் மிகுந்த பற்றுடன் இருக்கின்றார்கள் என்பதை கோணேசப் பெருமான் நகர உலா வரும்போது இந்த ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் அவதானிக்க முடியும்.

## பக்த அடியார்களின் பொறுப்பு

திருக்கோணேஸ்வர ஆலயத்திற்கு வழிபாட்டுக்காக வரும் பக்தர்கள் இனம், மதம், மொழிகளுக்கு அப்பால் சமய கட்டுப்பாடுகளையும், நிர்வாக கட்டுப்பாடுகளையும் பின்பற்ற வேண்டும்.

குறிப்பாக ஆடைகளில் கட்டுப்பாடுகளை பின்பற்றுதல், ஒளிப்படக்கருவிகள் தொலைபேசிகள் போன்றவற்றை பயன்படுத்துவதில் நிர்வாகத்தின் கட்டுப்பாடுகளை அவசியம் பின்பற்ற வேண்டும்.

## சுற்றுலாப்பயணிகளின் பொறுப்பு

திருக்கோணேஸ்வர ஆலயமும் அதன் பகுதிகளும் இந்துக்களின் புனித பிரதேசமாகும் எனவே இதன் புனிதத்தன்மை பாதிக்காத வண்ணம் சுற்றுலாப்பயணிகள் நடந்து கொள்ள வேண்டும்.

திருக்கோணேஸ்வர ஆலயம் சுற்றுலாத்தலம் இல்லை என்பதையும் எனினும் இனம், மதம், மொழிகள் வேறுபாடு இன்றி அனைவரும் இவ் ஆலயத்தினுள் பரந்த மனதுடன் அனுமதிக்கப்படுகின்றார்கள் என்பதையும் அனைவரும் புரிந்து செயற்பட வேண்டும்.

குறிப்பாக தீட்டு, துடக்குடன் ஆலய வளாகத்தினுள் செல்வது பாவச் செயலாகும். இது ஆலயத்தின் புனிதத்தன்மையை அது பெரிதும் பாதிப்படையைச் செய்யும்.

## நிர்வாகத்தினரின் பொறுப்பு

நிர்வாகத்தினர் வருமானத்தை மாத்திரம் கருத்தில் கொள்ளாது. திருக்கோணேஸ்வரப் பெருமானுடைய புனிதத்தன்மையை பாதுகாக்கும் முகமாகவும் கட்டுப்பாடுகளை இறுக்கமாகப் பேணுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அதற்கான அறிவித்தல்களை காட்சிப்படுத்துவதன்மூலம் ஆலயத்திற்கு வருபவர்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகாத வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்தவகையில் பின்வரும் பதாதைகளை காட்சிப்படுத்த முயற்சிக்க முடியும்:

1. தீட்டு, துடக்குடன் ஆலய வளாகத்தினுள் செல்லுதல் பாவச் செயலாகும்.
2. ஆலய வளாகத்தினுள் நாகரீகமற்ற முறையில் நடந்து கொள்வதையும், முகம் சுழிக்கும் விதமான புகைப்படம் எடுத்துக் கொள்வதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
3. ஆலயத்தினுள் அனுமதியின்றி புகைப்படம் எடுப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்
4. ஆலயத்தினுள் உட்செல்லும்போது ஆடைக்கட்டுப்பாட்டை அவசியம் பின்பற்ற வேண்டும்.

போன்ற வாசகங்களுடன்கூடிய பதாதைகளை மும்மொழிகளிலும் காட்சிப்படுத்த வேண்டும்

அத்துடன் ஆலயத்தினுள்ளும் ஆலய வளாகத்தினுள்ளும் பின்வரும் விடயங்கள் தடைசெய்யப்பட வேண்டும்.

1.பொருத்தமற்ற ஆடைகளுடன் ஆலயத்தினுள் செல்லுதல்

2.ஆலயத்தினுள் தொலைபேசியை பயன்படுத்துதல்.

3.ஆலயத்தினுள் அனுமதியின்றி ஒளிப்படக்கருவிகளை பயன்படுத்துதல்

4.ஆலயத்தினுள்ளும், ஆலய வளாகத்தினுள்ளும் தீட்டு, துடக்குகளுடன் செல்லுதல்

5.ஆலய வளாகத்தினுள் அநாகரீகமான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

6.ஆலய வளாகத்தினுள் முகம்சுழிக்கும்விதமான புகைப்படங்களை எடுத்தல்.

பிறருடைய மதத்தை மதிப்பளிப்பவர்கள் தங்களுடைய மதத்தையும் பாதுகாப்பார்கள்.

நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க
Supeedsamtv.com



supeedsam epaper, supeedsam videos, supeedsam news
www.supeedsam.com

# கல் குவாரி அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தாண்டியடியில் ஆர்ப்பாட்டம்!



**(வி.ரி.சகாதேவராஜா)**

திருக்கோயில் பிரதேசத்திற்குட்பட்ட தாண்டியடி ,சங்கமண் கிராமத்தில் கல்குவாரி அமைப்பதை எதிர்ப்பு தெரிவித்து தாண்டியடி மற்றும் சங்கு மண் கிராம பொதுமக்கள் நேற்று (28) திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த கல்குவாரியால் தாங்களும் தங்கள் பிரதேசங்களும் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவித்து அதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதேவேளை இந்த கல்குவாரியால் தங்களுக்கு ஏற்பட்ட மோசமான பாதிப்பு தொடர்பாக திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரனிடம் பொதுமக்கள் கடந்த 3 மூன்று மாதங்களுக்கு முன்பு முறையிட்டனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று இதனை இடை நிறுத்துமாறு புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்திற்கு எழுத்து மூலம் அறிவித்தார்.

இருந்தும் கடந்த மூன்று மாத காலமாக பெரிய இடை நிறுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதேவேளை இவ்வாரம் கல்குவாரி மீண்டும் இயங்கத் தொடங்கியது .

இதனை ஆட்சேபித்து உடனடியாக இதை நிறுத்த வேண்டும் என்று கோரி தாண்டியடி பொதுமக்கள் நேற்று திங்கட்கிழமை பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் .

அங்கு திருக்கோயில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமூகமளித்து விபரத்தை கேட்டறிந்து கொண்டார்.

திருக்கோயில் பிரதேச செயலாளர் கஜேந்திரனிடம் கேட்டபொழுது ''ஆர்ப்பாட்டம் நடந்தது உண்மை தான்.அதனை நிறுத்துவதற்கு உத்தரவிட்டிருந்தேன். ஆனால் சுரங்கங்கள் பணியகம் அதனை செய்யவில்லை.

எனவே தன்னை சந்தித்த பொது மக்களை மீண்டும் ஒரு முறை அதை பணியகத்துக்கு நான் ஞாபகம் ஊட்டி கடிதம் எழுதுகிறேன் .நீங்கள் ஆர்ப்பாட்டத்தை கைவிடுங்கள் கூறியதற்கு அமைவாக 12 மணி அளவில் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

# மஹா சிவராத்திரி தினத்தன்று அடியார்கள் தங்கள் கைகளினால் அபிஷேகம் பண்ணும் சந்தர்ப்பம் தேற்றாத்தீவு கொம்புச் சந்திப்பிள்ளையார் ஆலயத்தில்

**(தேற்றாத்தீவு)**

மஹாசிவராத்திரி விரத சிறப்பு நிகழ்வுகள் தேற்றாத்தீவு கொம்புச்சந்திப்பிள்ளையார் ஆலயத்தில் செவ்வாய்ககிழமை (01) சிறப்பாக நடைபெற உள்ளன. கொம்புச்சந்திப்பிள்ளையார் ஆலயத்திற்கு சித்தர்களால் நர்மதா நதிக்கரையில் இருந்து கொண்டு வரப்பட்ட பிரதிஸ்டை பண்ணப்பட்டிருக்கும் உயிர் லிங்கத்திற்கு அடியார்கள் ஆலய புனித கங்கையாகிய பாலாறு 'பால புஸ்கரணி' தீர்த்தக்கங்கையில் தீர்த்த நீர் எடுத்துவந்து தங்கள் கைகளினால் அபிஷேகம் பண்ணும் சிறப்பு நிகழ்வு காலை தொடக்கம் பின்னிரவு வரை இடம் பெறும்.



இதன் போது தங்களது ராசிகளுக்குரிய அபிஷேக திரவியங்களாலும் அபிஷேகம் பண்ணுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.அந்த வகையில் மேஷ ராசி வெல்லம் கலந்த நீர் ரிஷப ராசி தயிர் மிதுன ராசி கரும்பு கடகராசி சர்க்கரை சேர்ந்த பால் சிம்ம ராசி கன்னி ராசி பால் அல்லது நீரால் துலாம் ராசி பசும்பால்.விருச்சக ராசி தேன் அல்லது சர்க்கரை கலந்த நீரால் தனுசு ராசி குங்குமப்பூ கலந்த பால்.மகர ராசி நல்லெண்ணெய் கும்ப ராசி இளநீர் அல்லது கடுகு எண்ணெயை.மீனராசி குங்குமப்பூ பால் ஆலயத்தில் நான்கு சாமப் பூஜைகளும் லிங்கோற்பவர் காலத்தில் ஏகாதசருத்ர மஹாவேள்வியும் இடமபெறவுள்ளமையும் குறிப்பிடதக்கவிடயம். மாலை 6 மணி தொடக்கம் அதிகாலை வரை பஜனைஇ சங்கீதக்கச்சரிஇ நடனம்இ கதாப்பிரசங்கம்இ சமய பேருரைகள் என்பன இடம் பெறும். என ஆலய பரிபான சபையின் தலைவர் த.விமலானந்தராஜா தெரிவித்தார்.

# வட,கிழக்கு இணைந்த மாகாண சபை உருவாக்கத்திற்காக உயிர்களை தியாகம் செய்தவர்களின் கனவு மெய்ப்பட வேண்டும்

## தியாகிகளின் உறவினர்களை கௌரவிக்கும் நிகழ்வில் சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு





**(செ.பேரின்பராஜா)**

வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண சபை உருவாக்கத்திற்காக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்கள் தமது இன் உயிர்களை தியாகம் செய்துள்ளார்கள். அவர்களின் தியாகத்திற்காக அவர்கள் கண்ட கனவு மெய்ப்பட வேண்டும் என்று அக்கட்சியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இதுவரைகாலமும் உயிர் நீத்த அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேசத்தையும் அதன் சுற்றயல் பகுதிகளான சம்மாந்துறை, வீரமுனை, வளத்தாப்பிட்டி, மல்வத்தை, அட்டப்பள்ளம்,திராய்க்கேணி கிராமங்களையும் சேர்ந்த தியாகிகளின் குடும்பங்களை கௌரவிக்கும் நிகழ்வு 26.02.2022 அன்று காரைதீவு 'லேடி லங்கா' மண்டபத்தில் ஈபிஆர்எல்எப் கட்சியின் அரசியல் உயர் பீட உறுப்பினர் சின்னையா தோழர் சர்மா தலைமையில் நடைபெற்றது.

அவரது தலைமை உரையில் இந்நிகழ்வானது பகுதி பகுதியாக கிராமங்களை உள்ளடக்கி அம்பாறை,மட்டக்களப்பு மாவட்டங்கள் முழுவதும் நடாத்தப்படும் என குறிப்பிட்டார் அதனைத் தொடர்ந்து உரையாற்றிய சிவசக்தி ஆனந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை ,இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண அரசாங்கத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் அதனை பாதுகாப்பதற்காகவும் பெருந்தொகையான போராளிகள் தங்களது இன்னுயிர்களை ஆகுதி ஆக்கினர். மேலும் 13க்கு ஆதரவாகவும் எதிராகவும் பல்வேறு கோணங்களில் கருத்துக்கள் பரிமாறிக் கொண்டு இருக்ககூடிய இன்றைய காலகட்டத்தில் வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண அரசாங்கத்தை வழி நடத்தி சென்ற ஈபிஆர்எல்எப் தியாகிகளையும் அவர்களது குடும்பங்களையும் கௌரவிக்கின்ற நிகழ்வானது மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

அதே நேரம், எமது தோழர்கள் அன்றைய காலத்தில் மாகாண சபை முறைமையைப் பொறுப்பெடுத்து அதனை வினைத்திறன் மிக்கதாக வழிநடத்திக் கொண்டு மேலும் முன்னேறிச் செல்வதென்று கனவு கண்டார்கள். அதற்காகவே தமது உயிர்களை தியாகம் செய்தார்கள். ஆனால் தற்போது மாகாண சபை முறைமையே கேள்விக்குறியாகியுள்ளது. எனவே, எமது தோழர்களின் கனவு மெய்ப்பட வேண்டும். எமது மக்கள் அமைதியாக, சுதந்திரமாக, சுயநிர்ணயத்துடனாக வாழும் காலம் உருவாக்கப்பட வேண்டும். அதற்காக நாம் அனைவரும் தொடர்ச்சியாக உழைக்க வேண்டும் என்றார்.

இந் நிகழ்வில் உயிர் நீத்த தியாகிகளின் புகைப்படங்களுக்கு அவர்களது உறவுகள் தீபச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தியதுடன். உயிர் நீத்த தியாகிகளின் புகைப்படம் தாங்கிய நினைவு படங்கள் தோழர்களின் குடும்பங்களுக்கு கையளிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் முன்னாள் வடக்கு மகாண சபை உறுப்பினர் தியாகராசா மற்றும் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களான புண்ணியநாதன் கரன்,நாகராசா சங்கர்,நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் தோழர் வரதன் கட்சி உறுப்பினர்கள் பொது அமைப்புக்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இன்று சிவராத்திரியன்று உலக மேத்திற்காக மகாயாகம்!





**(காரைதீவு சகா)**

சிவராத்திரி தினமான இன்று(1)செவ்வாய்க்கிழமை உலக சேமத்திற்கான சிவராத்திரி மகாயாகமும்,மகாசிவராத்திரி பூஜையினையும் நடாத்த மண்டூர் பாலமுனையில் அமைந்திருக்கும் ஸ்ரீ ஆத்ம ஞான பீடம் தயாராகிவருகிறது.

அதனை முன்னிட்டு ஸ்ரீ ஆத்மஞான பீடத்திற்கு லிங்கோற்பவ சமேதரராய் மட்டக்களப்பு ஸ்ரீ பேரின்பஞான பீடத்திலிருந்து ஆன்மீக ஜெகத்குரு மகாயோகி எஸ்.புண்ணியரெத்தினம் சுவாமிகள் நேற்று வருகை தந்தார்கள்.

சுவாமிகளுடன் மகா யாகத்திற்கான உயிர் ஜீவ மூலிகைகள் மற்றும் அபிசேகத் திரவியங்கள் வருகை தரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கான உணவுப் பொருட்கள் அடங்கலாக சகலபொருட்களையும் தொண்டர்கள் கொணர்ந்தார்கள்.

# ஊடகவியலாளரை தாக்கிய நபரை எதிர்வரும் வெள்ளி வரை விளக்கமறியலில்

**( க.ருத்திரன்)**

மட்டக்களப்பு வந்தாறுமூலை சந்தைப் பகுதியில் செய்தி சேகரிக்கச் சென்ற ஐ.பி.சி.தமிழ் பிராந்திய ஊடகவியலாளர் இலட்சுமனன் தேவப்பிரதீபன் (நாராயணன்) என்ற ஊடகவியலாளரை தாக்கிய நபரை எதிர்வரும் 04.03.2022 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி பொலிசாருக்கு கட்டளை பிறப்பித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக சந்தேக நபரை ஏறாவூர் பொலிசார் கைது செய்து களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தினார்கள். பொலிசாரின் சாட்சியங்களை கேட்டறிந்து கொண்ட நீதிபதி சந்தேக நபரை எதிர்வரும் 04.03.2022 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கட்டளை பிறப்பித்துள்ளதுடன் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளரின் தொலை

பேசி தொடர்பான அறிக்கையினையும் நீதிமன்றத்திற்கு சமர்பிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.இதனையடுத்து பொலிசார் செங்கலடி வைத்தியசாலைக்கு வந்த பொலிசார் தமது தொலைபேசியினை பெற்றுச் சென்றுள்ளதாக ஊடகவியலாளர் தெரிவித்தாட.;

வந்நாறுமூலை சந்தைக்கு முன்னால் உள்ள பிரதான வீதியில் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடம் நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அகற்றப்பட்டமை தொடர்பாக உறவினர்கள் நியாயம் கேட்டு; கடந்த 26.2.2022 அன்று கவனயீர்ப்பு போராட்ட நடவடிக்கையில் ஈடுபட்டனர்.இதன்போது தமது தொலைபேசியூடாக வீடியோ எடுக்க முற்பட்ட ஊடகவியலாளர் கிழக்கு பல்கலைக் கழகத்தில் கடமையாற்றும் வே.நந்தகுகுமார் (கண்ணன்) என்பவரால் தாக்கப்பட்டார். தொடர்ந்து குறித்த சம்பவத்தை வீடியோ எடுக்க முயன்ற நலன் விரும்பிகள் தாக்கப்பட்டனர் ஏனைய ஊடகவியலாளர்கள் குறித்த நபரினால் அச்சுறுத்தப்பட்டனர்.தாக்குதல் மேற்கொண்டவருக்கும் தங்கள் கட்சிக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கிரானில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு அனுதாபம் தெரிவித்து உரையாற்றும்போது கருத்து தெரிவித்திருந்தார்.

இச் செயற்பாட்டிற்கு பல்வேறு ஊடக அமைப்புக்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் கண்டனங்களை வெளியிட்டிருந்தனர்.

# மலையகத்தை சோகத்தில் ஆழ்த்திய ஆசிரியரின் உயிரிழப்பு

தலவாக்கலை பி.கேதீஸ்



நுவரெலியா அட்டன் பிரதான வீதியில் தலவாக்கலை லோகி தோட்ட வழிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள 200 வருட பழமை வாய்ந்த ஆலமரமொன்றின் கிளைகளை வெட்டிக்கொண்டிருந்தபோது அதன் கிளையொன்று உடைந்து பிரதான வீதியில் சென்ற மோட்டார் சைக்கிள் மீது விழுந்ததில் அதை செலுத்திய நபர் உயிரிழந்த சமபவம் மலையகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. தலவாக்கலை லோகி தோட்டத்தைச் சேர்ந்தவரும் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய பாடசாலையின் பிரபல கணித ஆசிரியருமான வேலுசாமி மகேஸ்வரன்



(வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். வேலுசாமி மகேஸ்வரன் என்பவர் தலவாக்கலை நகரில் மிக பிரசித்தி பெற்ற ஒரு கணித ஆசிரியர். இவருக்கு 10 வயதில் ஒரு மகளும் 3 வயதில் மகனும் இருக்கின்றனர். இவரின் மனைவி ஒரு ஆசிரியை. தலவாக்கலை சமூகம் ஒரு சிறந்த கணித ஆசானை இழந்துள்ளது.

இச்சம்பவம் 21.2.2022 மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த நபர் நுவரெலியா நகரிலிருந்து தலவாக்கலை நகருக்கு சென்றுக்கொண்டிருந்தபோது தலவாக்கலை லோகி வழிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகில் வெட்டிக்கொண்டிருந்த ஆலமரத்தின் கிளையொன்று முறிந்து பிரதான வீதியில் விழுந்தபோது இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்து இடம்பெற்றபோது காயமடைந்த நபரை முச்சக்கரவண்டியில் லிந்துலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார். குறித்த நபருடன் மோட்;டார் சைக்கிளில் சென்ற இன்னொரு ஆசிரியர் சிறு காயங்களுடன் உயிர் தப்பினார். இச்சம்பவத்தின் போது வீதியில் சென்ற முச்சக்கர வண்டியொன்றும் பலத்த சேதத்துக்குள்ளானது. 200 வருடங்கள் பழைமையான ஆலமரத்தின் கிளைகளை வெட்டுவதற்கு வன திணைக்களம் அனுமதியை வழங்கியிருந்தபோதிலும் அதனை பாதுகாப்பற்ற முறையில் வெட்டியதன் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றதாக விசனம் தெரிவித்த பொதுமக்கள் நுவரெலியா அட்டன் பிரதான வீதியை மறித்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். 200 வருடம் பழைமை வாய்ந்த மரத்தினை வெட்டுவதற்கு அனுமதி வழங்கியது யார்? பிரதான வீதியில் 100ற்கு கணக்கான வாகனங்கள் செல்லும்போது பெயர் பலகைகள் வைக்கப்பட்டு சாரதிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இரு பக்கங்களிலும் வாகனத்தை நிறுத்தி சரியான முறையில் போக்குவரத்தை செய்வதற்கு ஊழியர்கள் மூலமாக வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இது ஒன்றுமே இங்கு செயற்படுத்தாமல் மரத்தை வெட்டியதால் இன்று அப்பாவி உயிர் போய்விட்டது.

உள்ளிட்ட போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுப்பட்டனர். இதனையடுத்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. சுமார் நான்கு மணித்தியாலங்கள் வரை போராட்டம் தொடர்ந்தது. இந்த நிலையில் மரத்தை வெட்டிய சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் வழங்கிய வாக்குறுதியையடுத்து போராட்டம் இரவு 9 மணியளவில் கைவிடப்பட்டது. மறுநாள் சந்தேகத்தின் பேரில் இரண்டு பெண்கள் உட்பட ஐவரை லிந்துலை பொலிஸார் கைது செய்தனர். தலவாக்கலை லோகி மல்லியப்பு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள், ஆலமரத்தினை வெட்டிய நானுஓயா பகுதியைச் சேர்ந்த இருவர் மற்றும் மரம் வெட்டுவதற்கு ஒப்பந்தம் பெற்ற நுவரெலியா பகுதியைச் சேர்ந்த ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் (22) ம் திகதி நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது சந்தேக நபர்களை எதிர்வரும் 28ம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர். லிந்துலை வைத்தியசாலையில் வைக்கபட்டிருந்த உயிரிழந்த ஆசிரியர் வேலுசாமி மகேஸ்வரனின் சடலம் மறுநாள் காலை 22 ம் திகதி காலை நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பிரதேச பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்;பட்டது. வேலுசாமி மகேஸ்வரனின் பூதவுடல் அன்னாரின் இருப்பிடமான லோகி தோட்டத்தில் அவரின் வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் 23 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில் அத்தோட்ட பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இறுதி ஊர்வலத்தில் 100 ற்கு அதிகமான பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்லாது மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பல அரசியல் பிரமுகர்கள் வேலுசாமி மகேஸ்வரனுக்கு அஞ்சலி செலுத்தினர்.



200 வருடங்கள் பழைமையான ஆலமரத்தின் கிளைகளை வெட்டுவதற்கு வன திணைக்களம் அனுமதியை வழங்கியிருந்தபோதிலும் அதனை பாதுகாப்பற்ற முறையில் வெட்டியதன் காரணமாக இந்த உயிரிழப்பு இடம்பெற்றுள்ளது. தலவாக்கலை லோகி வழிப்பிள்ளையார் கோவில் மிக பழைமை வாய்ந்த சக்திமிக்க கோவிலாகும். அதன் அருகாமையில் 200 வருடம் பழைமை வாய்ந்த ஆலமரம் ஒன்று உள்ளது. குறித்த வழிப்பிள்ளையார் ஆலயம் தலவாக்கலை கூம்மூட் தோட்டத்திற்கு உரித்துடையதென அத்தோட்ட மக்களால் தொடரப்பட்ட வழக்கு இடைநடுவே அத்தோட்ட மக்களால் பொருளாதார பின்னணி காரணமாக கைவிடப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அண்மையில் இந்த ஆலமரத்தின் ஒரு பகுதி சேதமைந்துள்ளதாகவும் அது உடைந்து வீழ்ந்தால் கோவிலும் அதன் அருகாமையிருக்கும் உரிமையாளரின் குடியிருப்பும் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக கூறி அ;பபகுதி கிராமசேவகரிடம் ஆலமரக் கிளைகளை வெட்ட அனுமதி கேட்டிருந்தபோது அப்பகுதி கிராம சேவகர் ஊடாக நுவரெலியா மாவட்ட பிரதேச செயலாளரின் அனுமதியுடன் வன திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. மரக் கிளைகளை வெட்டுவதற்கு தனியார் ஒருவருக்கு வன திணைக்களம் ஒப்பந்தம் வழங்கிள்ளது. ஆனால் மிக சூட்சுமமான முறையில் ஆலமரத்தின் கிளைகள் வெட்டப்பட்டதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

மிக விரைவில் மரங்களை துண்டு துண்டுகளாக அரியும் மிக சக்தி வாய்ந்த உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் ஆலமரத்தின் கிளைகள் பிரதான வீதியின் நடுவே விழாமல் மரத்தின் உச்சியிலிருந்து வெட்டப்பட்ட கிளைகள் கயிற்றினூடாக கீழே இரக்கப்பட்டதாகவும் அதனை தூரத்திலிருந்து அவதானித்தவர்கள் கூறுகின்றனர். ஆனால் மரத்தின் கிளைகள் வெட்டப்பட்ட அந்த நான்கு நாட்களும் அந்த பிரதான வீதியில் பொலிஸாரோ அல்லது வேறு நபர்களோ ஆலமரத்தின் கிளைகள் தரிக்கப்படுவதாக எவ்வித அறிவுத்தல்களையும் பிரதான வீதியில் பயணிக்கும் வாகனங்களுக்கொ வாகன சாரதிகளுக்கோ விடுக்கவில்லை. பாரிய மரம் ஒன்றை வெட்டுவதாக இருந்தால் அதற்கான சில ஒழுங்கு விதிகளை பின்பற்றி இருக்கவேண்டும். பெயர் பலகைகள் வைக்கப்பட்டு சாரதிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு இரு பக்கங்களிலும் வாகனத்தை நிறுத்தி சரியான முறையில் போக்குவரத்தை செய்வதற்கு ஊழியர்கள் மூலமாக வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி ஒன்றும் இங்கு இடம்பெறவில்லை. ஆனால் எவ்வித பாதுகாப்பு நடைமுறையும் பின்பற்றாமல் ஒரு பிரதான வீதியில் பாரிய மரம் ஒன்றை அன்றைய தினம் மரம் வெட்ட போவதாக அப்பகுதி கிராம சேவகருக்கோ, பொலிஸாருக்கோ, நகரசபைக்கோ அது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரி எவருக்கும்



தெரிவிக்க வில்லை என சம்பந்தப்பட்ட அனைவரும் இதிலிருந்து நழுவி உள்ளனர்;. நுவரெலியா பிரதேச காரியாலயம், வனப்பாதுகாப்பு திணைக்களம், தலவாக்கலை லிந்துலை பொலிஸ் நிலையங்கள், மற்றும் நகரசபை ஆகியவை இணைந்து சரியான முறையில் செயற்பட வில்லை. இங்கு மர கிளையை வெட்டுவதாக கூறி மரத்தையே வெட்டி அகற்றும் வரை அதிகாரிகள் வேடிக்கை பார்த்துள்ளனர். அத்துடன் ஆலமரத்தின் கிளையை வெட்டுவதற்கு முனைப்புடன் செயல்பட்ட நபர் தலைமறைவாகிவுள்ளதாகவும் அவருக்கு எவ்வித நடவடிக்கையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்கவில்லை எனவும் இந்த பிரதான வீதியை செப்பனிடும்போது இந்த கோவிலையும் இந்த மரத்தினையும் அகற்ற எத்தனித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் அன்றைய அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அதன் ஒரு கிளையை கூட வெட்ட அனுமதி வழங்கவில்லை. அதேபோல மேல் கொத்மலை திட்டத்தின்போதும் கூட அக்கோவிலையோ அந்த ஆல மரத்தையோ அகற்ற முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அனுமதி வழங்கவில்லை எனவும் எமது பாரம்பரியத்தை காப்பாற்றியதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். லோகி வழிப் பிள்ளையார் கோவிலிருந்து லிந்துலை பொலிஸாருக்கும் தலவாக்கலை பொலிஸாருக்கும் அதன் எல்லைப்படுத்தப்படுகின்றது. எனவே இப்பிரச்சினையில் லிந்துலை பொலிஸ் பிரிவில்தான்; விபத்து நிகழ்ந்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் இப்பிரச்சினையிலிருந்து விலகியுள்ளனர். எனவே இவ்விடத்தில் இந்த ஆலமரத்தின் கிளைகளை வெட்டி வீழ்த்துவதற்கு அனுமதியை வழங்கிய அரச நிறுவனங்கள் உட்பட அனைவரும் பதில் கூறவேண்டியவர்களே. எனவே ஆசிரியர் மகேஸ்வரனின் மரணத்திற்கு நியாயமான தீர்வை வழங்க வேண்டும்.

வேலுசாமி மகேஸ்வரன் என்பவர் தலவாக்கலை நகரில் மிக பிரசித்தி பெற்ற ஒரு கணித ஆசிரியர். இவருக்கு 10 வயதில் ஒரு மகளும் 3 வயதில் மகனும் இருக்கின்றனர். இவரின் மனைவி ஒரு ஆசிரியையாக இருக்கின்றபோதிலும் அவர்களின் எதிர்காலம் கேள்வி குறியாகியுள்ளது. ஒரு குடும்பத் தலைவனை இழந்து வாடுகின்றது. அதுமட்டுமல்லாது தலவாக்கலை சமூகம் ஒரு சிறந்த கணித ஆசானை இழந்துள்ளது. எத்தனையோ மாணவர்களை கணித பாடத்தில் சித்தியடைய செய்த பெருமை வேலுசாமி மகேஸ்வரனையே சாரும். தான் அன்றைதினம் இந்த உலகை விட்டு பிரிவை தெரிந்து வைத்திருந்தாரோ என்னவோ அன்று அதிகாலை 6.05 மணிளவில் எதுவும் இல்லாமல் பிறந்து, எல்லாம் வேண்டும் என அலைந்து, எதுவும் நிரந்தரமில்லை என தெரிந்து, உயிரும் சொந்தமில்லை என உணர்ந்து, உலகை விட்டு ஒரு நாள் பறந்து செல்வதுதான் வாழ்க்கை என்று தனது முகப்புத்தகத்தில் ஸ்டேடஸ் இட்டுள்ளார். எனவே எதிர்காலத்தில் இவ்வாறான கவனக்குறைவான செயல்களில் எவரும் ஈடுபடக்கூடாத வகையில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே அனைவரின் வேண்டுகோளாகும்.

அதேபோல நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியிலே இந்த மரம் வெட்டப்பட்டுள்ளது இருப்பினும் இவ்வாறு ஒரு பாரிய ஆலமரத்தின் கிளைகள் வெட்டப்படுவது மாத்திரமல்ல பிரதான வீதி என்பதால் அதில் பயணிக்கும் வாகனங்களுக்கும் பாதசாரிகளுக்கும் நிச்சயமாக பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கவேண்டும். இவை அனைத்தையுமே கவனத்தில் கொண்டே செயற்பட்டிருக்க வேண்டும் எனவே இது தொடர்பாக நகரசபைத் தலைவர் லெச்சுமன் பாரதிதாஸனிடம் வினாவியபோது லோகி வழிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள ஆலமரத்தின் கிளைகள் வெட்டப்படுவதாக எந்த வித அறிவித்தலையும் தனக்கு யாரும் வழங்கவில்லை எனவும் இது தொடர்பாக பிரதேச செயலகமோ, கிராம சேவகரோ எந்தவொரு நிறுவனமோ தனக்கு அறிவிக்கவில்லை என்றார். அப்படி அறிவித்திருந்தால் நான் அதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்திருப்பேன் என்றார்.

